பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 19 செவ்வாய்க்கிழமை (02.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :156

# கடல் விமான யோசனையை புலிகள் சாதகமாக ஆராய்வு!

## அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் தகவல் தெரிவிப்பு

கொழும்பு, மே 2

**விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் வன்னி வந்து செல்வதற்கான பயண ஏற்பாட்டு விவகாரத்தில் அரசாங்கம் முன்வைத்த கடல் விமான வசதி வழங்கும் யோசனைஸ்ய விடுதலைப் புலிகள் சாதகமாகப் பரிசீலித்திருக்கின்றனர் என அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாலித கோஹென்ன நேற்றுமாலை 'உதயன்' இற்குத் தெரிவித்தார்.**

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்வ் ஹென்றிக்ஸனுடன் நேற்றுப் பிற்பகல் இரண்டரை மணி நேரம் பேச்சு நடத்திய பின்னர் கருத்து வெளியிட்ட கலாநிதி கோஹென்ன மேற்படி கடல்விமானத்தை எங்கே இறக்கி ஏற்றுவது என்ற விடயத்தில் அரசும், விடுதலைப் புலிகளும் உடன்பாடொன்றுக்கு வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடல்விமானத்தை இறக்குவது பற்றிய உடன்பாடு எட்டப்பட்டுள்ளமை விடுதலைப் புலிகள் கடல்விமானப் போக்குவரத்து யோசனையை ஏற்றுக்கொண்டனர் என அர்த்தப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் டோரா மீது இளக்கந்தையில் தாக்குதல் ஐந்துபடையினர் படுகாயம்

திருகோணமலை,மே2

திருகோணமலை சம்பூர் கடற்பகுதியில் கடற்படைக்குச் சொந்தமான 'டோறா' படகு மீது புலிகளினால் நேற்றுக் காலை நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதலில் கடற்படை அதிகாரி ஒருவரும், சிப்பாய்கள் நால்வரும் படுகாயமடைந்தனர் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

சம்பூர் இளக்கந்தை கடற்பகுதியில் நேற்றுக்காலை 5.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஐந்து படகுகளில் வந்தவர்கள் இந்தத் தாக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய கல்விச்சுடரில்**

**இணைந்த கணிதம் I, II வினாத்தாள்கள் வெளிவரும்.**

## ஈழ அகதிகள் எட்டுப் பேர் நடுக்கடலில் தத்தளிப்பு?

இராமேஸ்வரம்,மே2

நடுக்கடலில் தத்தளிக்கின்றனர் என்று கருதப்படும் இலங்கை அகதிகள் எட்டுப் பேரை மீட்பதற்காக இந்தியக் கடலோரக் காவல்படையினர் தீவிர தேடுதல் நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் போர் அபாயம் ஏற்பட்டதையடுத்து பெரும் எண்ணிக்கையிலானோர் அகதிகளாக தமிழகம் வர ஆரம்பித்திருக்கின்றனர். கடந்த சனிக்கிழமை தலைமன்னாரைச் சேர்ந்த எட்டு அகதிகள் இலங்கையி

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை அழைத்து இந்தியப் பிரதமர் பேச்சு நடத்த வேண்டும்

### பழ. நெடுமாறன் பகிரங்க வேண்டுகோள்

சென்னை, மே2

இலங்கையில் தற்போது ஏற்பட்டி ருக்கும் நிலைமை, தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் ஆகியன குறித்து பாரதம் உடனடிக் கவனம் செலுத்தவேண்டும். இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக நம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பிரதமர் மன்மோகன் சிங் பேச்சு நடத்தவேண்டும்.

- இவ்வாறு பகிரங்கக் கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன். ஓவியர் புகழேந்தியின் 'தமிழீழம் நான் கண்டதும் என்னைக் கண்டதும்' நூல் வெளியீட்டு விழா சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடந்த சில ஆண்டுகளாக பழ. நெடுமாறன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## உலகப் பாட்டாளி தினத்தை புறக்கணித்து கிளிநொச்சி நகரில் நேற்றுப் பேரணி!

கிளிநொச்சி,மே2

சர்வதேச தொழிலாளர் தினத்தைப் புறக்கணித்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி கிளிநொச்சி நகரில் நேற்றுப் பேரணி நடத்தினர்.

சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்கள் மீது புரிந்து வரும் கொடூரங்களைச் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டும் விதத்தில் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழர்களின் போராட்டத்தில் உள்ள நியாயப்பாட்டை உணர்ந்துகொள்ளுமாறு உலகப் பாட்டாளி சமூகத்திற்கு பேரணியின் முடிவில் அறைகூவலும் விடுக்கப்பட்டது. ''தமிழர் தேசப்பாட்டாளிகளின் பெருவிருப்பு சுதந்திரமும், இறைமையும் உள்ள தமிழர் தாயகம்'' என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்புப்பட்டிகளை அணிந்தவாறு கிளிநொச்சி பொதுமைதானத்தில் கூடிய பொது

(13ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துச் சபை சாரதிகள், நடத்துநர்கள் நேற்று ஆறுமணிநேரம் பணிப் புறக்கணிப்பு

### கடற்படையினர் தாக்கியதைக் கண்டித்து

யாழ்ப்பாணம், மே 2

பஸ் சாரதியும் நடத்துநரும் கடற்படையினரால் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சாரதிகளும் நடத்துநர்களும் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கும் ஊர்காவற்துறைக்கும் இடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றின் சாரதியும் நடத்துநரும் ஊர்காவற்றுறையில் வைத்து நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டனர்.

சாரதியான பி.சபாநாயகராஜா (வயது 46) மற்றும் நடத்துநரான கே.பிரபாகரன் (வயது 33) ஆகிய இருவருமே கடற்படையினரின் தாக்குதலில் காயமடைந்தனர். இவர்கள் இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பஸ் ஊர்காவற்றுறையில் பயணிகளை இறக்கிவிட்

(13ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பரவலாக நேற்றும் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், மே 2

குடாநாட்டில் நேற்றுப் பகல் முதல் பல்வேறு இடங்களிலும் இராணுவத்தினரையும் காவலரண்களையும் இலக்கு வைத்து கிரனேட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நண்பகல் 12.15 மணியளவில் நல்லூர் அரசடியில் உள்ள படையினரின் காவலரண் மீது கிரனேட் வீசப்பட்டது. இதில் படையினருக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை.

நண்பகல் 12.30 மணியள்வில் கொக்குவில், குளப்பிட்டிச் சந்திக்குச் சமீபமாக ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் 4 படையினர் காயமடைந்தனர்.

12.45 மணியளவில் ஏ-9 வீதியில் சென்றுகொண்டிருந்த படையினரின் தொடர் வாகன அணி மீது, புத்தூர்ச் சந்திக்குச் சமீபமாக வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், படையினர் பயணித்த இரண்டு பஸ்களுக்கும் இடையில் - கிளைமோர் குண்டு வெடித்தது என்றும் -

இதனால், படையினருக்கு எதுவித இழப்பும் ஏற்படவில்லை என்றும் - படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் காரணமாக ஏ-9 வீதி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணி

(14ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழு மீதான தாக்குதலின் போது கப்டன் உட்பட 5 இராணுவத்தினரும் பலி!

கிளிநொச்சி, மே2

மட்டக்களப்பு - பொலனறுவை மாவட்டங்களின் எல்லைப் புறத்தில் அரச கட்டுப்பாட்டிலுள்ள வெலிகந்தைப் பகுதியிலிருந்த கருணா அணியினரின் முகாமை விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணி நேற்றுமுன்தினம் தாக்கியபோது, கருணா குழுவினரை மீட்க முயன்ற இலங்கை இராணுவத்தின் அதிகாரி ஒருவர் உட்பட 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்திருக்கின்றனர். அந்த அரச இராணுவத்தினரின் பெயர் விவரங்களையும் அவர்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

வெலிகந்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட 18 பேரில் மேற்படி ஐந்து பேரும் அடங்குகின்றனர் எனக் கூறப்படுகிறது.

மேற்படி ஊடுருவித் தாக்குதலை வெற்றிகரமாக முடித்த பின்னர் ஞாயிற்றுக்கிழமை

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரில் கிளைமோர் குண்டு 4 தமிழர்கள், 2 கடற்படையினர் பலி!

திருகோணமலை, மே2

திருகோணமலை நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் இரு கடற்படைச் சிப்பாய்கள், நான்கு தமிழர்களென மொத்தமாக ஆறு பேர் கொல்லப்பட்டனர். 3 கடற்படைச் சிப்பாய்களும், இரு சிவிலியன்களும் படுகாயமடைந்தனர். திருகோணமலை சண்முக வித்தியாலயத்திற்கு அருகில் காலை 9.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதிகாரிகள் மனிதாபிமானத்தை மறந்ததால் அல்லைப்பிட்டியில் வயோதிபர் அவலச் சாவு!

யாழ்ப்பாணம், மே 2

மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வதற்கு அதிகாரிகள் நடந்துகொள்ள மறுத்த காரணத்தாலேயே, நேற்றுமுன்தினம் அல்லைப்பிட்டியில் சுடப்பட்ட வயோதிபரான இராசமணி சங்கரப்பிள்ளை அவலச் சாவை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை கடற்படையினரால் அவர் சுடப்பட்டார். கிளைமோர் தாக்குதலையடுத்துப் படையினர் இந்த அட்டூழியத்தைப் புரிந்தனர். இதில் படுகாயமடைந்த இராசமணி சங்கரப்பிள்ளை அதிகாரிகளின் செயற்திறனற்ற போக்கு மற்றும் அசட்டை காரணமாகவே உயிரிழந்துள்ளார்.



சங்கரப்பிள்ளை சுடப்பட்டதன் பின்னரும் அந்த இடங்களிலெல்லாம் படையினரின் பிரசன்னம் இருந்தது. இதனால் வாகனம் ஒன்றைப் பிடித்து அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. இதனை அடுத்து அவரது மகன் தன்னிடமிருந்த கைத் தொலைபேசி மூலம் தனது உறவினர் ஒருவருக்கு விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். அந்த உறவினர் வெளிநாடுகளில் இருக்கும் தமது உறவினர்களுக்கு இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார்.

அவர்கள் உடனடியாக யாழ்ப்பாணப் பொலீஸாருக்குத் தகவல் தெரிவித்து காயமடைந்து கிடப்பவரைக் காப்பாற்ற உதவும்படி கேட்டுள்ளனர். "சம்பவம் நடந்த இடம் ஊர்காவற்துறைப் பொலீஸ் பிரிவிற்கு உட்பட்டது. அதனால் அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்" என்ற பதிலே உறவினர்களுக்குக் கிடைத்துள்ளது.

இதனையடுத்து அவர்கள் ஊர்காவற்துறைப் பொலீஸாருடன் தொடர்பு கொண்டனர். "எங்களால் அம்புலன்ஸ் வசதி செய்ய முடியாது. அத்துடன் இப்போது வெளியே செல்லவும் முடியாது" என்று கூறி அவர்களும் கைவிரித்துவிட்டனர்.

அதன் பின்னர் அந்த உறவினர்கள் யாழ். போதனா வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு உதவி கோரியுள்ளனர். அம்புலன்ஸ் ஒன்றை அனுப்பி காயமடைந்தவரின் உயிரைக் காக்குமாறு மன்றாடியுள்ளனர். எனினும், சம்பவம் இடம்பெற்ற பிரதேசம் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு உட்பட்டது என்பதால் அங்கே அம்புலன்ஸ் உதவியைக் கோருமாறு அவர்களுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் ஊர்காவற்துறை ஆஸ்பத்திரியுடன் தொடர்புகொண்டபோது, "அது வேலணை வைத்தியசாலைக்கு உட்பட்ட பிரிவு என்பதால் அம்புலன்ஸை அங்கேதான் கேட்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், வேலணை வைத்தியசாலைக்கு தொலைபேசி வசதி ஏதுமில்லை. இதனால் அதனுடன் தொடர்புகொள்ள அந்த உறவினர்களால் முடியவில்லை.

காயமடைந்தவரை வைத்தியசரலைக்கு எடுத்துச் செல்லும் உறவினர்களின் நீண்ட நேர முயற்சி இறுதியில் தோல்வியில் முடிவடைந்தது.

இரவு 7.00 மணிக்குச் சுடப்பட்டு உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த சங்கரப்பிள்ளை அதிகாலை 4.30 மணியளவில் உயிரிழந்தார்.

நேற்று நடந்த மரண விசாரணைகளின் போது அதிகாரிகளின் இத்தகைய மனிதத்தன்மையற்ற செயல்கள் குறித்து நீதிவானிடம் தெரிவிக்கப்பட்டது.

• சேவை மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டிய வைத்தியசாலை நிர்வாகங்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளாததன் காரணத்தால் இந்த அவலச் சாவு ஏற்பட்டுள்ளது என்று வேதனையுடன் தெரிவித்தார் நீதிவான். காயமடைந்திருந்த சங்கரப்பிள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தாரானால் அவர் காப்பாற்றப்பட்டிருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் பொலீஸாரின் செயற்பாடுகளையும் அவர் கண்டித்தார். பொலீஸார் தமது உயரதிகாரிகளுக்கு இந்த விடயத்தைத் தெரிவுபடுத்தியிருந்தால், உரிய நடவடிக்கைகளை அவர்கள் எடுத்திருப்பார்கள். ஆனால் பொலீஸார் உரியவிதத்தில் செயற்படவில்லை என்றும் அவர் கூறினார். (ம-3-15)

## ஜி.சீ.ஈ. பெறுபேறு குடாநாட்டில் நேற்று வெளியாகியது

யாழ்ப்பாணம்,மே2

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

கடந்த டிசெம்பர் மாதம் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வெள்ளிக்கிழமை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், யாழ். மாவட்டத்துக்கான முடிவுகள் தரைவழியாக எடுத்துவரப்பட்டு நேற்றுப் பிற்பகல் அளவில் வலயக் கல்விப்பணிப்பாளர்களிடம் சேர்க்கப்பட்டன.

இதனையடுத்து, பாடசாலை அதிபர்கள், பரீட்சைப் பெறுபேறுகளை தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் பெற்றுக்கொண்டனர் என்று கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-13)

## மாமன் - மருமகன் தர்க்கம் உயிர்ப் பலியில் முடிந்தது!

### கள்ளுத் தவறணையில் சம்பவம்

கள்ளுத் தவறணையில் மாமன் - மருமகனுக்கிடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாகியதில் படுகாயங்களுக்கு உள்ளான மாமன் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

தென்மராட்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், பலியானவர் மந்துவில் கிழக்கைச் சேர்ந்த வேலன் நடராசா (வயது 55) என்று பொலீஸார் தெரிவித்தனர். அவரது மருமகனான சின்னவன் பிரபாகரன் என்பவர் கொடிகாமம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நீதிவான் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார்.

கள்ளுத் தவறணையில் மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டதில், ஆத்திரமேலீட்டால் மருமகன் மாமனாரைத் தாக்கித் தள்ளி வீழ்த்தினார் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். மாமனார் கீழே வீழ்ந்த போது அவரது பின் தலைப் பகுதி தரையில் மோதுண்டுள்ளது. காயமடைந்த அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி மரணமானார். (ம-86)

## மிதிவெடி அகற்றும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க மாவட்ட படைத்தளபதி அனுமதி

### பலாலி தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே2

குடாநாட்டில் இடைநிறுத்தப்பட்டிருந்த மிதிவெடி அகற்றும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க யாழ். மாவட்ட இராணுவத் தளபதி அனுமதி வழங்கியுள்ளார். பலாலியில் இயங்கும் யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று இதனை அறிவித்தது.

இது தொடர்பாக, படைத் தலைமையகம் நேற்றுமாலை விடுத்த செய்திக் குறிப்பில்,

யாழ். மாவட்டத்தில் மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவரும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் பலாலி தலைமையகத்தில் நடைபெற்றது. யாழ். அரச அதிபர் க.கணேஷும் இதில் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட மிதிவெடியகற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மிதிவெடியகற்றும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க அனுமதிக்குமாறு கோரினர். இதற்கு மாவட்ட இராணுவத் தளபதி அனுமதி வழங்கினார்.

குடாநாட்டில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தி மற்றும் மனிதநேய நடவடிக்கைகளைப் பாராட்டி மாவட்ட இராணுவத் தளபதி, தொண்டர் அமைப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சுடாதீர்கள் எனக் கெஞ்சக் கெஞ்ச கடற்படையினர் சுட்டுக் கொன்றனர்!

### அல்லைப்பிட்டியில் உயிரிழந்தவரின் மகள் சாட்சியம்

யாழ்ப்பாணம், மே 2

சுடவேண்டாம் என்று தனது தந்தை கெஞ்சக் கெஞ்ச அவரைக் கடற்படையினர் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவித்துள்ளார் அல்லைப்பிட்டியில் சுட்டுக் கொல்லப்பட்ட இராசமணி சங்கரப்பிள்ளை என்பவரின் மகள்.

இந்தக் கொலை தொடர்பாக நேற்றுமுன்தினம் அப்பகுதியில் இரவுப் பணியில் இருந்த சகல படையினரையும் நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களது துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களையும் விசாரணைகளுக்காகச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவரான இராசமணி சங்கரப்பிள்ளை (வயது 74) என்ற வயோதிபரின் மரண விசாரணையின் போதே யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்த உத்தரவை வழங்கினார்.

அல்லைப்பிட்டிச் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு 6.45 மணியளவில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது. அதன் பின்னர், தாக்குதல் நடந்த இடத்திற்கு அருகே இருந்த வீட்டில் வசித்து வந்த இராசமணி சங்கரப்பிள்ளை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உயிரிழந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவரது மரணம் குறித்த விசாரணைகளை யாழ். மேலதிக நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று மேற்கொண்டார். இறந்தவரின் மனைவியும் மகளும் சாட்சியமளித்தனர். அவர்கள் தமது சாட்சியத்தில், வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த ஐந்து கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சங்கரப்பிள்ளை காயமடைந்தார் என்றும் அவரை வீட்டுக்குள் எடுத்துச் சென்று வைத்திருந்தபோதும் அம்புலன்ஸ் வசதியோ வாகன வசதியோ கிடைக்காத காரணத்தால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை என்றும் தெரிவித்தனர்.

"சுட முயன்ற படையினரைப் பார்த்து தன்னைச் சுடவேண்டாம் என்று என் தந்தை மன்றாடினார். ஆனாலும் அவர்கள் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டனர்" - என்று தெரிவித்தார் மகள்.

இறந்தவரின் வீட்டினருகே வசிக்கும் பொடி மாத்தையா டேவிட் என்பவர் சாட்சியமளிக்கையில், "எனது வீட்டிற்கு வந்த கடற்படையினர் என்னைச் சுடமுயன்றனர். சுட வேண்டாம் என்று நான் கெஞ்சினேன். அவர்களுடன் வந்த அதிகாரி ஒருவரின் பணிப்பின் பேரில் அவர்கள் என்னைச் சுடாமல் விட்டுவிட்டார்கள். ஆனால் துப்பாக்கிப் பிடியால் என் தலை மீது தாக்கினார்கள்." - என்றார்.

கிளைமோர் தாக்குதலை அடுத்து இந்தப் பகுதியைச் சேர்ந்த 13 பேரின் அடையாள அட்டைகளைக் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர் என நீதிவானிடம் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அல்லைப்பிட்டி கடற்படை அதிகாரியைச் சம்பவ இடத்திற்கு வரவழைத்த நீதிவான், அடையாள அட்டைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் திரும்ப ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ம-3-15)

## படையினரின் சோதனைகளுக்கென நீண்டநேரம் காத்திருந்த பயணிகள்

### ஆனைப்பந்திச் சந்தியில் நேற்றுமாலை சம்பவம்

யாழ். ஆனைப்பந்திச் சந்தியில் நேற்று மாலை படையினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போது அவ் வழியே பயணித்த பொதுமக்கள் மற்றும் வாகனங்களில் பயணம் செய்தோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டியிருந்ததாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, நாலாபுறங்களிலும் இருந்து ஆனைபந்திச் சந்தியை வந்தடைந்த பொதுமக்களும், வாகனங்களும் படையினரின் சோதனை நடவடிக்கைகளுக்காக சுமார் ஒரு மணிநேரம் காத்திருக்கவேண்டியேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சோதனை நடவடிக்கைகளுக்கென வாகனங்கள் வழிமறிக்கப்பட்டதையடுத்து, யாழ். - பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி என்பவற்றில் நீண்டவரிசையில் வாகனங்கள் தரித்து நின்றதை அவதானிக்கமுடிந்தது.

படையினரால் வழிமறிக்கப்பட்ட வாகனங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாகச் சோதனையிடப்பட்டதுடன், பயணிகள் அனைவரும் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு உடற்சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

படையினரின் சோதனை நடவடிக்கைகள் காரணமாக, நேற்றுமாலை 5 மணியளவில் யாழ். பஸ்நிலையத்தில் பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட பஸ்கள் நேற்றிரவு 8 மணியளவிலேயே பருத்தித்துறையைச் சென்றடைந்தன என்றும் -

இதனால், இந்த பஸ்களில் பயணித்த பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் தத்தமது வீடுகளைச் சென்றடைவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்தது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-15)



பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் பணிப்புறக்கணிப்பையடுத்து யாழ். பஸ் நிலையத்தில் பஸ்கள் தரித்து நிற்பதையும், பஸ் சேவை மீண்டும் ஆரம்பமானதையடுத்து பயணிகள் முண்டியடித்துக் கொண்டு பஸ்ஸில் ஏறுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- தமிழினியன், பிரியன், நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# முழுக் குழப்பத்தில் தெற்கு

"பல்வேறு சமையல்காரர்களின் தலையீட்டால் சமையல் கெட்டது." - என்ற பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. (Too Many Cooks Spoilt the Soup.)

அதைப் போலத்தான் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாளும் விடயத்தில் ஜனாதிபதி மஹிந்தவின் அரசில் பல்வேறு தரப்பினரும் பல்வேறு வகைகளில் தம்பாட்டில் கையடித்து நிலைமையைக் குழப்பி வைத்திருக்கின்றார்கள் போல் தோற்றுகின்றது. அரசுத் தரப்பில் இந்த விவகாரங்களைக் கையாள்வதில் தனி ஒரு மைய அச்சு இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு புறம் பாதுகாப்பு விடயங்களை 'கோட்டபாய அண்ட் கொம்பனி' தன்பாட்டில் - தன் இலக்கின்படி - கொண்டு இழுக்கிறது. மறுபுறம் 'அரச சமாதானச் செயலகம், சமரச முயற்சிகளை முன்னெடுப்பதை விடுத்துத் தன்னை போர்ச் செயலகமாக மாற்றிக் கொண்டு யுத்த சன்னதத்தை வெளிப்படுத்துகின்றது. அரச ஊடகங்களோ சமாதானத்துக்காகப் பிரசாரம் செய்வதா அல்லது யுத்தப் பிரகடனத்தை முன்னெடுப்பதா என்று தெரியாமல் இரண்டும் கெட்டான் நிலையில் அல்லாடுகின்றன. வெளிவிவகார அமைச்சுக்கோ களநிலைவரம் புரிவதில்லை. கொழும்பு தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பதிலடியாக சம்பூரில் பொதுமக்கள் நிலை மீது அரச படைகள் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை ஆரம்பித்திருப்பதை பிரிட்டிஷ் வெளியுற வுத்துறை அமைச்சர் கூறித்தான் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அறிந்து கொள்ளும் நிலை.

இவையெல்லாம் போதாதென்று - இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசின் கொள்கைப் போக்கு என்னவென்று தெரியாமல் நிற்கும் தென்னிலங்கைச் சிங்கள மக்களை சிங்கள ஊடகங்கள் இன்னும் குழப்பி, சிக்கலுக்குள்ளும், ஐயுறு நிலைக்குள்ளும் ஆழ்த்தி வருகின்றன.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர் தரப்புடன் தான் பகையுணர்வையும், விரோதப் போக்கையும் தென்னிலங்கை பேணுகின்றது என்று பார்த்தால், அதையும் தாண்டி தனது குழப்பகரமான நிலைப்பாடு காரணமாக, யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் கண்காணிப்புக் குழுவினர், அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைப் பணி வழங்கும் நோர்வேத் தரப்பு, உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமைகள், சர்வதேச சமூகம் என எல்லாத் தரப்புகளுடனும் முரண்பட்டு, கொழுவுப்பட்டு நிற்கின்றது கொழும்பு.

உண்மையில், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் படுகொலையை அடுத்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புணர்வு, அதிருப்திப் போக்கு என்பன போல, யுத்த நிறுத்த காலத்தில் கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்தும் புலிகளுக்கு எதிராக விரோத - கண்டன - உணர்வு சர்வதேச ரீதியில் எழுந்திருக்கவேண்டும். அப்படித்தான் பலரும் கூட எதிர்பார்த்து இருந்தார்கள்.

ஆனால், இராணுவத் தலைமையகத்தில் நடந்த அந்தக் குண்டுத் தாக்குதலுக்குப் பதிலடியாக - பழிவாங்கும் நடவடிக்கையாக - அப்பாவிப் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான குண்டு வீச்சை நடத்தியதன் மூலமும், அண்மைக்காலத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் தான் வெளிப்படுத்திய குழப்பகரமான சமிக்ஞைகள் மூலமும் எல்லாவற்றையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டது தென்னிலங்கை.

ஒருபுறம் அரசின் யுத்தநிறுத்த மீறல்களை கண்காணிப்புக் குழு அப்படியே தனது அறிக்கைகள் மூலம் அம்பலப்படுத்தி அரசை இக்கட்டுக்குள் சிக்கவைத்து விட்டது.

மறுபுறம், தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் துணைப்படைகள், ஒட்டுப்படைகள் இல்லை என அரசு மறுத்து வருகையில், அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவி, கருணா குழுவினர் பலரைக் கொன்று, பலரைக் காயப்படுத்தி, மேலும் பலரைத் தாங்களே கைதுசெய்து அரச பாதுகாப்புத் துறையின் நெற்றியில் நாமம் போட்டிருக்கின்றார்கள் புலிகள். இந்த அதிரடித் தாக்குதல் மூலம் துணைப்படைகள் விவகாரத்தில் அரசின் இரட்டைவேடத்தைத் தெளிவாகப் புலிகள் அம்பலப்படுத்தியுமிருக்கின்றார்கள்.

போதாக்குறைக்கு, கிழக்கில் உள்ள தமது போராளிகளுக்கான வன்னிப் போக்குவரத்து வழியை பழைய முறையில் முன்னெடுக்கமுடியாது என அரசு மறுத்த போது, புலிகள் தாங்கள் முன்பு முன்னெச்சரிக்கை கொடுத்த மாதிரியே தமது சொந்தக் கடற்கலங்களில், அரச கடற்படையினருக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு, கிழக்கிலிருந்து தமது உறுப்பினர்களைக் கடல் மார்க்கமாகக் கூட்டிவந்து அரசின் கண்ணில் மண்தூவியிருக்கின்றனர்.

இவ்வாறு, அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதில் பெரும் குழப்பத்துக்குள் ஆழ்ந்திருக்கும் மஹிந்தவின் அரசு, வெளியில் பெரும் அரசியல் இக்கட்டிலும், பொருளாதார நெருக்கடியிலும் கூட மாட்டுப்பட்டிருக்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தப் பொறிக்குள் இருந்து வெளியே வருவதற்கு - மீளுவதற்கு - அரசுத் தரப்பு என்ன தந்திரம் செய்யப் போகின்றது? பொறுத்திருந்து பார்ப்போம்!

படுகொலைகள், கைதுகள் தொடர்பாக

# சர்வதேச கமிஷன் நியமித்து விசாரணை நடத்த வேண்டும்

## ஜனாதிபதியிடம் மாவை வற்புறுத்து

கொழும்பு,மே 2

இராணுவத் தலைமையகத்துக்கருகில் குண்டுவெடித்ததையடுத்து ஆயிரக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணை என்ற பெயரில் தடுப்புக்காவலில் ஏராளமானவர்கள் வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் விவரங்கள் என்ன எதற்காகக் கைதுசெய்யப்பட்டார்கள் எங்கே தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதெல்லாம். மர்மமாகவே உள்ளன. இந்த விவரங்களை சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்களுக்கு உடன் தெரிவிக்கப்படவேண்டும். சாத்தியமில்லையென்றால், அந்த விவரங்கள் ஐ.சி.ஆர்.சி. மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கு அறிவிக்கப்படவேண்டும். அங்கிருந்து உறவினர்கள் விவரங்களைப் பெற்றுக்கொள்ள ஏதுவாய் இருக்கும்.

இவ்வாறு தெரிவிக்கும் கடிதம் ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்றுவரும் மிருகத்தனமான கொலைகள் மற்றும் ஆங்காங்கே இடம்பெறும். சுற்றிவளைப்பு, கைதுகள் பற்றிய புகார்கள் கிடைத்தவண்ணமிருக்கின்றன. அவிசாவளை தோட்டப் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட 5 ஆண்களின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான கொலைகளுக்கு கைசெய்யப்பட்ட தமது உறவினர்கள் உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் அச்சம் கொண்டுள்ளார்கள்.

எனவே, இம்மாதிரியான கண்மூடித்தனமாக கைதுகள், படுகொலைகள் பற்றி விசாரித்து அறிவதற்கு பொருத்தமான சர்வதேச ஆணைக்குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்று சேனாதிராஜா ஜனாதிபதியை வற்புறுத்திக்கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்மாதிரியான எமது முன்னைய கோரிக்கைகள் முறையாக செவிசாய்க்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர் சர்வதேச ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரிப்பது இம்மாதிரிச் சம்பவங்கள் மீளவும் இடம்பெறாமல் தடுக்க உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

# பூங்கா,சுகாதார நிலையம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம்,மே 2

யாழ். சுப்பிரமணிய பூங்காவும், ஜுபிதுணி சுகாதார நிலையமும் நாளை புதன்கிழமை திறந்துவைக்கப்படவுள் ளன.

யாழ். மாநகரசபை நிர்வாகத்தால் பராமரிக்கப்படும் சுப்பிரமணியம் பூங்கா 1990 ஆம் ஆண்டு யுத்த அனர்த்தத்தால் முற்றிலுமாக தரைமட்டமானது. குடநாட்டின் குறியீடுகளின் ஒன்றாக விளங்கிய இப்பூங்கா புனர்வாழ்வு அமைச்சு, யுனிசெவ், யாழ். மாநகர சபை ஆகியவற்றின் நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மடத்தடியில் இயங்கி வந்த ஜுபிலி சுகாதார நிலையமும் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்தது. இதுவும் மேற்குறிப்பிட்ட நிதியுதவி மூலம் அபிவிருத்திசெய்யப்பட்டது.

இவற்றின் திறப்பு விழாக்கள் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளன. யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் ஜுபிலி சுகாதார நிலையத்தை நாளை பிற்பகல் 4 மணிக்கும், சுப்பிரமணியம் பூங்காவை பிற்பகல் 4.30 மணிக்கும் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் அழைப்புவிடுத்துள்ளார்.

# சம்பள அதிகரிப்புக்கான புதிய சுற்றறிக்கை தொழிற்சங்கங்களுக்குத் திருப்தியில்லையாம்

அச்சுவேலி,மே 2

சம்பள அதிகரிப்புக் குறித்த புதிய சுற்றறிக்கை திருப்திகரமாக இல்லையென தொழிற்சங்கங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட சம்பள அதிகரிப்புச் சுற்றறிக்கைக்குப் பதிலான புதிய சுற்றறிக்கை கடந்த மாதம் 25ஆம் திகதி வெளியிடப்பட்டது.

புதிய சுற்றறிக்கையில் எதிர்பார்த்தளவுக்கு சம்பள அதிகரிப்பு இல்லையென தொழிற்சங்க பிரமுகர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

புதிய சுற்றறிக்கையை அரச துறை சம்பள மீளாய்வு தொழிலாளர் சங்க ஒன்றியம் எதிர்க்கத் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி.சரவணபவானந்தன் கூறியதாவது:-

புதிய சுற்றறிக்கையில் அரச பதவித் தரங்களுக்கான தகுதிகாண் வரையறை செய்யப்பட்டிருப்பது ஆசிரியர்கள் அதிபர்களுக்கு முதலாம் வகுப்பு புகையிரத ஆசனச்சீட்டு திரும்பவும் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கவை. ஆனாலும் சம்பள அதிகரிப்பில் ஏற்றுக்கொள்ளத் தக்க மாற்றம் ஏற்படவில்லை.

ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்ச்சி குறைக்கப்பட்டுள்ளது.

சேவை உருவாக்கப்பட்டபோது வரையறை செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான சிறப்பு அம்சங்கள் புதிய சுற்றறிக்கையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

அதிபர் ஆசிரியர்களுக்கு இருந்து வந்த பதவி நிலை அந்தஸ்து மறுக்கப்பட்டுள்ளது - என்றார் அவர்.

## உதயவாக்கு

*ஆற்றுநீர் ஓய்வின்றி எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கின்றது. அதனால் ஆற்றுநீருக்கு எந்தப்பயனுமில்லை. பிறருக்கு மட்டுமே பயன்படுகிறது.* - ஓர் அறிஞர்.

## நாளை

சித்திரை 20
புதன்கிழமை
03.05.2006
• திதி: ஷஷ்டி
முன்னிரவு. : 11.14வரை
நட்சத்திரம் : புனர்பூஷம்
பின்னிரவு : 03.16 வரை
சுபநேரம் : 04.26- 05.56
ராகுகாலம் :11.56 - 01.26


# ஒத்திவைக்கப்பட்ட மூன்று பரீட்சைகள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு நடக்கும்

அச்சுவேலி,மே 2

பரீட்சைத் திணைக்களத்தினால் ஒத்திவைக்கப்பட்ட மூன்று பரீட்சைகள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவை தரம் 1 இல் இருப்பவர்களை அதிவிசேடதரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை மற்றும் இலங்கை வங்கியின் பயிற்சி உதவியாளர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை ஆகியவை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளன. உள்நாட்டுவருமான வரித்திணைக்கள, வரி மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆள்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

பரீட்சைகள் நடைபெறுவது தொடர்பான புதிய திகதிகள் தொடர்பான அறிவித்தலை பரீட்சைத்திணைக்களம் வெளியிட்டுள்ளது. (ஒ-11)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பஸ்நிலையம் முன் பாக ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் கொண்ட ஒருபரப்புக் காணியுடன் ஒரு மாடிக் கடைக் கட்டடம் (முன்புறம் பின்புறம் பாதைகள் கொண்டது) தொடர்பு: T.P. 0713056177. (சி-49143)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி மேற்கு, தம்பளை வீதியில் கிணற்றுடன் கூடிய 4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0776628666 (49960)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாள்களில் 2kg இற்கு மேல் வளர்ச்சி யடையக்கூடிய பகிரா புறொயிலர் குஞ்சுகள் 03.05.2006 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச்சந்தி, தாரகை- பருத்தித்துறை, P.ரவி - சாவகச்சேரி, றாஜீவ் -கால் நடைத் தீவன விற்பனை நிலையம் -மாதகல் றோட் பண்டத்தரிப்பு. T.P.No 222 3529, 2867 (49953)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப் பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 08.05.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - ஆலடி உடுவில், சந்நிதி பாம் - தொண்டைமானாறு, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் -19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49164)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1964 பூராடம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற, O/L படித்த, லண்டனில் வேலை செய்யும் மணமகனுக்கு லண்டன், பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளில் பிரஜாவுரிமைபெற்ற மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2865 மே/ பா உதயன். (49957)

---

உ
சிவமயம்

# விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை

ஸ்ரீ விநாயகப் பெருமான் கிருபையை முன்னிட்டு
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் வியவருஷம் சித்திரை மாதம் 20 ஆம் நாள் (03.05.2006)
புதன்கிழமை சஷ்டித் திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய நன்னாளில்
காலை 9.20 மணி முதல் 10.54 மணிவரை வரும் மிதுன லக்ன
சுபமுகூர்த்த வேளையில்,



நீர்கொழும்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் பிரம்ம ஸ்ரீ K.நடராஜக்குருக்கள் வாலாம்பிகை அம்மாவின் தௌஹித்திரனும் ஸ்ரீமான் ஸ்ரீமதி ராமச்சந்திரசர்மா சுப்புலஷ்மி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் ஆகிய சிரஞ்சீவி
**சுப்பிரமணிய சர்மாவிற்கு**
(முரளி)

வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் கோயில் பிரம்மஸ்ரீ சுப்பிரமணியஐயர் கமலாம்பிகை அம்மா தம்பதியரின் பௌத்திரியும் எமது சிரேஷ்ட புத்திரியுமான சௌபாக்கியவதி
**ராஜராஜேஸ்வரியை**
(ராஜி)

யாழ்ப்பாணம் வண்ணை கதிர் வேலாயுத சுவாமி கோயில் கல்யாண மண்டபத்தில் கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்துகொள்ள நீர்கொழும்பு ஸ்ரீ முத்துமாரி அம்மன், முன்னேஸ்வரம் வடிவாம்பிகா சமேத முன்னை நாத ஸ்வாமிகளினதும், வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் திருவருள் துணையுடன் பெரியோர்களின் நல்லாசியுடனும் நிச்சயித்திருப்பதால் மேற்படி முகூர்த்தத்திற்கு தாங்கள் தங்கள் இஷ்டமித்ர குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: 03.05.2006 அன்று புதன்கிழமை காலை 5.30 மணிக்கு 95, கோயில் வீதி கைலாசபிள்ளையார் கோயிலடியில் இருக்கும். மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

* 06.05.2006 சனிக்கிழமை மணமகள் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

ஸ்ரீமான்.ராமச்சந்திர சர்மா
திருமதி குமாரசாமி சர்மா சாவித்திரி.
107, கடற்கரைத் தெரு, நீர்கொழும்பு.
T.P.: 077-6127384.

ஸ்ரீமான்.ஸ்ரீமதி. முருகானந்த சர்மா தனலஷ்மி அம்மா.
தற்காலிக விலாசம்:
பிரப்பங்குளம் வீதி,யாழ்ப்பாணம்.
T.P.: 071-2350663.

(49968) (39.14.15.21)

---

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி- பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்- 2006

காலம்: 14.05.2006 ஞாயிற்றுக்கிழமை
இடம்: கல்லூரி மண்டபம்
நேரம்: பி.ப. 3மணி

*அங்கத்தவர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். இதுவரை அங்கத்துவம் பெறாதவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு இணைந்து கொள்ளவும்.*

பி.கு.: பொதுக்கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் தமது பிரேரணைகளை 07.05.06 இற்கு முன்பு சமர்ப்பிக்கவும்.

தலைவர். (சி.49170)(39.21.14.15) செயலாளர்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் **வா.சிவராசா**
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் **கணபதிப்பிள்ளை வாரித்தம்பி**
அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
**யாழ்.இந்துக்கல்லூரி.**
(49964)(21.14.15)

---

## நீங்காத நினைவலைகள்

15 ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு





அமரர் பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை | திருமதி கணபதிப்பிள்ளை கமலாட்சி

| | | |
|---|---|---|
| 13.04.1935 | மலர்வு | 15.01.1939 |
| 12.05.1991 | உதிர்வு | 12.05.2005 |

அன்னையும் தந்தையும் எம்மைப் பிரிந்து
ஆண்டுகள் பல சென்றதுவே
இவ்வுலகில் நீங்கள் இல்லை என நினைக்கும்போது
எம் இதயம் பதை பதைக்குதையா
மீண்டும் எம்மோடு உறவாட
இவ் அவனி வந்து உதியுங்கள்

- குடும்பத்தினர்.

*'முருகபதி இல்லம்',*
*5ஆம் வட்டாரம், நயினாதீவு.*
(49882)(21.15.19)

---

## மரண அறிவித்தல்

### சந்திரமோகன் (நற்குணசேகரம்) ஹரி

கனடாவைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரமோகன் (நற்குணசேகரம்) ஹரி 30.04.2006 ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் (U.S.A) அகால மரணமானார்.

அன்னார் சந்திரமோகன் - கஜனி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், ஆனந்தராஜா -நிஜோயினி தம்பதியரின் பெறாமகனும், சோல், சபித்தா, பிரவீண் ஆகியோரின் சகோதரனும் நற்குணசேகரம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அருமைப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
**அ.நற்குணசேகரம்** (பேரன்)
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

U.S.A 0015016660271
Canada 0014164560183
(49963)(21.14.15)

---

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்

மண்மகிழ
09
-
09
-
1933



கண்நெகிழ
24
-
04
-
2004

அமரர் **இளையதம்பி சிவசுப்பிரமணியம்**

பாரினில் நாம் ஏற்றத்துடன் வாழ ஏணியாய் நின்று
சீரும் சிறப்புமாக வாழ வித்திட்டு
வழிகாட்டிய எங்கள் அன்பு அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எம் மனதை விட்டு என்றுமே
பிரியமாட்டீர்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- குடும்பத்தினர்.

*நிரந்தர முகவரி:*
[illegible]
மீசாலை.

*தற்காலிக முகவரி:*
[illegible] நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு.

(49961)(21.14.15)

---

# பொலனறுவையில் 100 தமிழர்கள் கைது

கொழும்பு, மே 2

பொலனறுவை, சுங்காவில், மாணிக்கப்பட்டி, ததுறுவெல பகுதிகளில் உள்ள அரிசி ஆலைகளில் வேலைசெய்யும் தமிழ் இளைஞர்களைக் கடந்த வெள்ளிக்கிழமை பொலனறுவைப் பொலீஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பல மணிநேரம் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்புப் பகுதியில் இடம்பெற்று வரும் குண்டுத் தாக்குதல் மற்றும் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாகவே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

தங்களது குடும்பப் பின்னணியைக் கருத்திற்கொண்டு கூலித் தொழில் செய்துவரும் இவர்களைப் பயங்கரவாதிகள் என்று பொலீஸார் கைதுசெய்து துன்புறுத்துவது மிக்க வேதனை தருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க)

# அச்சுவேலி தெற்கில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரிப்பு

அச்சுவேலி,மே2

அச்சுவேலி தெற்கில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்து 10 சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. அச்சுவேலி தெற்குப் பயிர்ச்சோலைச் சந்தியில் உள்ள ஒரு வீட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் வேலைக்கு செல்லுவோர் தமது சைக்கிள்களை நிறுத்திவிட்டு பஸ்சில் செல்வது வழமை.

இதனை அவதானித்த திருடர் குழு தாங்கள் விட்ட சைக்கிள்களை எடுப்பது போல நடித்து புதிய சைக்கிள்களை நாசூக்காக இடைக்கிடை களவாடிச் சென்றனர்.

இந்த வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் 10 சைக்கிள்கள் திருடிச் செல்லப்பட்டன.

சைக்கிள் திருட்டுத் தொடர்பாக பொலீசிலும் புகார் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

(3-11)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதால் பாவனையாளர் பாதிப்பு

கொடிகாமம்,மே2

தென்மராட்சி கொடிகாமம் காளிகோயில் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்படுவதால் பாவனையாளர் வீடுகளில் நாளாந்தம் போதிய மின்சாரமின்றி மின் உபகரணங்கள் பழுதடைகின்றன என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சட்ட விரோதமாக மின்சாரம் பெறப்படுகின்றமையால் வீதியோரங்களில் உள்ள மின்சாரக் கம்பிகளும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

எனவே உரியவர்கள் இவ் விடயத்தைக் கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

(3-203)

# இரு மாணவிகளுக்கு வெள்ளிப்பதக்கங்கள்

அச்சுவேலி,மே2

ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலய மாணவிகள் சைவசமய பரீட்சைகளில் இரண்டு வெள்ளிப்பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

சைவ பரிபாலன சபை நடத்திய 2005 ஆம் ஆண்டு சைவ சமய பாடப்பரீட்சையில் தரம் 10 இல் கல்விகற்கும் செல்வி மதுரா பாலசுப்பிரமணியம் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

யாழ்.மாநகர சபை சைவசமய விவகாரக் குழு நடத்திய சைவசமய பாடப் பரீட்சையில் தரம் 9 இல் கல்விகற்கும் செல்வி நிலானி சுந்தரமூர்த்தி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். (3-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் எட்டுப் பேர் நடுக்கடலில் அந்தரிப்பு

சென்னை,மே 2

இலங்கையிலிருந்து சென்ற ஈழ அகதிகள் எட்டுப்பேர் நடுக்கடலில் அநாதரவாக விடப்பட்டிருக்கின்றனர் என்று ராமேஸ்வரத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இது தொடர்பாக நேற்றைய 'தினமலர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அதில் -

இலங்கையில் நடந்த சண்டையைத் தொடர்ந்து கடந்த ஜனவரி 12 முதல் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளனர். தலைமன்னார், பேசாலைப் பகுதிகளில் இருந்து உயிருக்குப் பயந்து அகதிகளாக தமிழகம் வர ஏராளமான அகதிகள் காத்திருக்கின்றனர்.

இலங்கை கடல் பகுதியில் இரவில் மீன் பிடிக்கத் தடை விதித்துள்ளதால் இலங்கை கடற்படை இரவு நேர ரோந்தை தீவிரப்படுத் தியுள்ளது. இதனால், அகதிகள் தமிழகம் வருவதற்குப் படகுகளின்றி தவித்துவருகின்றனர். கடந்த சனியன்று தலைமன்னாரைச் சேர்ந்த எட்டு அகதிகள் இலங்கை படகில் புறப்பட்டு தமிழகம் வந்துள்ளனர். அவர்களை படகு ஓட்டிகள் எட்டாம் தீடையில் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர். தமிழக மீனவர்கள் இது குறித்து ,மண்டபம் இந்திய கடலோரக் காவல் படையினருக்கு தகவல் தெரிவித்தனர். ரோந்து சென்ற இந்திய கடலோரக் காவல் படையினர் கடலின் பல இடங்களில் தேடியும் அகதிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் திணறிவருகின்றனர். கடல் பகுதியில் பலத்த காற்று, கடல் கொந்தளிப்பு உள்ளதால் அகதிகளைத் தொடர்ந்து தேடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால் எட்டு அகதிகள் காப்பாற்றுவோர் யாருமின்றியும் உணவின்றியும் நடுக்கடலில் தவிக்கின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-202)

## மாறன் மீது விசாரணை நடத்தக்கோரி பிரதமருக்கு அத்வானி அவசர கடிதம்

திருச்சி,மே 2

மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் மீதான குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடத்த வேண்டும். உடனடியாக அவருடைய துறையை மாற்றவேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான அத்வானி, பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

பிரதமருக்கு சனிக்கிழமை அனுப்பிய அந்தக் கடிதத்தின் நகலைத் திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் வெளியிட்டார் அத்வானி.

''தங்கள் அமைச்சரவையில் தொலைத்தொடர்வு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைஅமைச்சகத்துப் பொறுப்பு வகிக்கும் தயாநிதி மாறன் மீது கூறப்படும் தகுதிக்கு ஒவ்வாத நடத்தை பற்றித் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்.

தென்னிந்தியாவில் 15 இடங்களிலிருந்து 'த நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் வெளிவருகிறது. அண்மையில் அந்த இதழ் வெளியிட்ட ஒரு செய்தியில் இந்தியத் தொழில் துறையில் மிகவும் மதிப்பு மிக்க முன்னோடிகளில் ஒருவரான ரத்தன் டாடாவை அமைச்சர் மிரட்டியதாகவும் டாடா குழுமத்தின் 'டிடிஎச்' தொழில் நிறுவனத்தின் மூலதனப் பங்குகளில் மூன்றிலொரு பகுதிகளையும் நிர்வாக உரிமையையும் தன்னுடைய குடும்பத்துக்கு அளிக்கவேண்டும் என ரத்தன் டாடாவைத் அமைச்சர் மிரட்டியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

தயாநிதி மாறன் மற்றும் அவருடைய சகோதரரின் குடும்பம், தென்னிந்தியாவின் பெரிய பொழுதுபோக்கு ஊடக நிறுவனமான 'சன் ரீவி'யின் உரிமையாளர்கள் சில காலத்துக்குமுன் அந்நிறுவனப் பங்குகள் விற்பனைக்கு வந்தபோது 'செபிக்கு சன் ரீ.வி. சமர்ப்பித்த ஆவணத்தில் சன் ரீ.வியில் வணிகத்துக்கு நேரடித் தொடர்புள்ள அமைச்சகத்தின் பொறுப்பை வகிக்கும் காபினெட் அமைச்சர் என்பதை வெளிப்படுத்தாமல் தயாநிதி மாறனைப் பங்குதாரர்களில் ஒருவர் என்று மட்டுமே குறிப்பிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் தயாநிதி மாறானுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான நம்பத்தக்க விசாரணை நடத்தவேண்டும். அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையெனக் கண்டறியப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பலமாக வலியுறுத்துகிறேன் - என்று அத்வானி கேட்டிருக்கிறார். (ஐ-202)

## அத்வானியுடன் தயாநிதி மாறன். திடீர் சந்திப்பு

திருச்சி,மே 2

பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான எல்.கே. அத்வானியை தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் தயாநிதி மாறன் திருச்சியில் சந்தித்துப் பேசினார்.

இவர்கள் இருவருமே ஒரே ஹோட்டலில் தான் தங்கியிருந்தனர்.

தயாநிதி மாறனின் துறையை மாற்றி அவர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தைக் காலையில் அத்வானி வெளியிட்டார்.

பிற்பகல் 2 மணியளவில் நிருபர்களைச் சந்தித்த தயாநிதி மாறன், தன்மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன் அ.தி.மு.கவுக்கும் பா.ஜவுக்கும் இடையே மறைமுக உறவு இருப்பதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

இந்தியச் செய்திகள்

## மாறன் தவறு செய்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் கலைஞர் கருணாநிதி

சேலம்,மே 2

டி.டி.எச். விவகாரத்தில் தயாநிதி மாறன் தவறு செய்திருந்தால் நடவடிக்கை எடுப்பேன் என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறினார்.

மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் மீதுள்ள பொறாமையால் குற்றஞ் சுமத்துகின்றனர். டி.டி.எச். விவகாரம் தொடர்பாக அவர் மீது கூறப்பட்ட புகார் பொய்யானது என நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். தயாநிதி மாறன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

என்னுடைய பேரன் என்ற தயவுதாட்சணியம் காட்ட மாட்டேன். சாதாரண கட்சி உறுப்பினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுமோ அது தயாநிதி மீதும் எடுக்கப்படும்.

ஆனால், அவர் மீதான குற்றச்சாட்டுக்கு அடிப்படை ஆதாரமில்லை. தேர்தல் நேரத்தின் போது மக்கள் கவனத்தை திசைதிருப்பும் முயற்சியாக குற்றஞ்சாட்டியுள்ளனர் - என்றார் கருணாநிதி. (ஐ-202)

## தி.மு.க. அரசு தரப்போவது ஜப்பான் ரீ.வியா?

சென்னை,மே.2

தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் ஏழைக் குடும்பங்களுக்கு எந்த நிறுவனத்தின் கலர் ரீ.வி இலவசமாகத் தரப்படும்.

தி.மு.கவின் தேர்தல் வாக்குறுதி ரீ.வி விளம்பரம் இதற்குப் பதில் சொல்கிறது.

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவச கலர் ரீ.வி., விவசாயத் தொழிலாளர்களுக்கு 2 ஏக்கர் இலவச நிலம், இலவச காஸ் அடுப்பு என்பதே தி.மு.கவின் பிரதான தேர்தல் பிரசார வாக்குறுதி.

இந்த இலவச வாக்குறுதி குறித்த விளம்பரங்கள் சன்.ரீவியில் ஒளிபரப்பாகி வருகின்றன. அதில் ரீ.வி இல்லாத ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தம்பதிக்கு (கிளாரியோ) பெயர் கொண்ட ரீ.வி. பெட்டியைத் தருவது போல விளம்பரம் ஒளிப்பரப்பாகிறது.

ஜப்பான் ரோஷிபா நிறுவனத்தின் தயாரிப்புதான் இந்த கிளாரியோ ரீ.வி.

கிளாரியோ ரீ.வி விற்பனை செய்வதற்கு நாடு முழுவதும் முகவர்கள் உள்ளனர். கிளாரி ரீ.வியில் பல்வேறு மாதிரிகள் உள்ளன. 21 செ.மீ முதல் 29 செ.மீ வரை ரீ.விக்கள் உள்ளன.

அவ்வளவாக இன்னும் பிரபலமாகாத கிளாரியோ ரீ.வி விற்பனையில் முன்னணியில் இல்லை. (ஐ)

## தி.மு.க. ஆட்சி அமைக்கும் ஜோதிடர் ஆருடம்

சென்னை,மே 2

வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று ஜோதிடர் பிரம்ம ஸ்ரீ குருவாயூர் சூர்யன் நம்பூதிரி தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் தி.மு.க. தனிப்பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களை விட 60 இடங்களில் அதிகமாக வெல்லும். இதில் 15 இடங்கள் கூடவோ குறையவோ வாய்ப்புண்டு. தி.மு.க. அரசில் இரண்டு முதல்வர்கள் பதவிவகிப்பர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-202)

# கொள்கைகளை மறந்து கட்சிகள் கொடி தூக்கியிருக்கும் தேர்தல் இது

**வெ**யில் 108 டிகிரி. வெளியே அனல் பறக்கிறது. பிரசாரத்திலும் அப்படித்தான். அனல் பறந்துகொண்டிருக்கிறது.

'ஏசி' அறையில் சுகமாகச் சுவாசித்துக்கொண்டிருந்த தலைவர்கள் இன்று கொளுத்தும்வெயிலில் வீதி வீதியாக வந்துகொண்டிருக்கின்றனர்.

இலவச அறிவிப்புகளைத் தொடர்ந்து ஏற்பட்ட பரபரப்பு கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிவரும் நிலையில் 'டாடா' விவகாரம் மீண்டும் சூட்டைக் கிளப்பியுள்ளது.

வாக்குப்பதிவு இன்னும் சரியாக 7 நாள்களே உள்ளன. இந்த நிலையில் அடுத்து எதை முன்னிறுத்திப் பிரசாரத்தை முடுக்கிவிடுவது என்று இரு தரப்பிலும் புதி அறிவிப்புகளை - விஷயங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

அறிவிப்புகள், போட்டி அறிவிப்புகள், குற்றச்சாட்டுகள், பதிலடிகள் என எல்லாம் சரிதான். ஆனால் ஒரு விஷயம், ஆள்பிடிக்கும் வேட்டையும் கட்சி தாவும் படலமும் இந்தத் தேர்தலைப் போன்று எந்தத் தேர்தலிலும் நடந்ததில்லை. அந்த வகையில் இந்தத் தேர்தல் வித்தியாசமான தேர்தல்தான்.

வழக்கமாக தேர்தல் வந்துவிட்டால் அங்கொன்றும் இங்கொன்றுமாக மாறுவதும் தாவுவதும் வாடிக்கைதான். தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிறகுதான் தாவல் தலைவர்களுக்கு ஞானோதயம் உதித்ததைப்போல் அந்தக் கட்சியின் குறைகள் கண்களுக்குத் தெரிந்திருக்கிறது.

மக்கள் பிரச்சினைகளின் அடிப்படையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டதால் நான் கட்சி மாறுகிறேன் என்று யாராது நெஞ்சை நிமிர்த்திச் சொல்லமுடியுமா?

அதாவது காவிரிப் பிரச்சினையில் தி.மு.க.வின் அணுகுமுறை இப்படி இருந்தது. ஆனால், அதைவிட அ.தி.மு. கவின் அணுகுமுறை சிறப்பாக உள்ளது. மொழிப் பிரச்சினையில் அ.தி.மு.கவின் போக்குப் பிடிக்கவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலைமையின் செயற்பாட்டில் எனக்கு உடன்பாடு இல்லை என்று சொல்லி யாராவது கட்சி மாறியதாகச் சொல்ல முடியுமா? கொள்கை அடிப்படையில் கட்சி மாறியதெல்லாம் அந்தக் காலத்தோடு முடிந்துவிட்டது.

'எனக்கு மரியாதை இல்லை. எனக்குப் பதவி கொடுக்கவில்லை. அவர்கள் ரீ.வியில் என்னைக் காட்டவில்லை' என்ற சுயநலக் கோஷங்கள்தான் அதிகம் கேட்கின்றன.

எதிர்த்தரப்பில் பேரம் பேசி விட்டு, இங்கு இருப்பதைவிட அங்கு போனால் லாபம் அதிகம் என்பதை எல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டுத்தான் இவர்கள் கட்சி தாவுகிறார்கள்.

10 நாள்களுக்கு முன்பு வரை 5 ஆண்டு கால ஆட்சியைப் பாராட்டிப் பேசியவர்கள் இன்று அந்த ஆட்சியைத் தூற்றிப் பேசுவதும், நேற்று ஆட்சியைத் தூற்றியவர்கள் இன்று ஏதோ புதிதாகக் கண்டுபிடித்ததைப் போல் பாராட்டிப் பேசுவதும் தான் வேடிக்கை. மக்கள் தட்டிக்கேட்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை தான்.

சரத்குமார், விஜய டி.ராஜேந்தர் இதற்கு உடனடி எடுத்துக்காட்டு. பட்டியல் போட்டால் நீண்டுகொண்டேபோகும்.

என்ன நடந்தாலும் எவ்வளவு அடக்குமுறை இருந்தாலும் சகித்துக்கொண்டு அந்தக் கட்சியில் இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால், ஏதாவது வாய் திறந்தால் தற்போது கிடை[illegible]தும் கிடைக்காமல் போய் விடுமோ என்ற [illegible] அவர்கள் சகித்துக்கொண்டிருக்கக் காரணம். எதிர்த் தரப்பில் இருந்து ஆதரவுக் கரம் நீண்ட பிறகே இவர்கள் வீரவசனம் பேசுகின்றனர்.

தனிப்பட்ட மனிதர்கள் இப்படி என்றால் கட்சிகளும் அப்படித்தான் செயற்படுகின்றன. சூழ்நிலைக்கு ஏற்ப கொள்கைகளையும், கோஷங்களையும் மாற்றிக்கொள்ளத் தயாராக உள்ளனர்.

1996ஆம் ஆண்டு அ.தி.மு.கவின் ஊழல் ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி வெற்றி பெற்ற த.மா.கா., கம்யூனிஸ்ட் கட்சிகள் பின்னர் அ.தி.மு.கவுடன் ஐக்கியமாகிவிட்டன. அவர்களைப் பொறுத்தவரை 4 ஆண்டில் அ.தி.மு.க. புனிதமாகிவிட்டது.

மதவாத சக்தியான பா.ஜ.க.வுடன் தி.மு. க. கூட்டணி வைத்துக்கொண்டதால்தான் உறவை முறித்துக்கொண்டதாகக் கூறி அ.தி. மு.கவுடன் கூட்டணி சேர்ந்தன. ஆனால், ஊழல், சர்வாதிகாரம், அராஜகம் என்ற பழைய குற்றச்சாட்டுகள் வசதியாக மறந்து போயின. ஆனால், இப்போது மீண்டும் தூசி தட்டி ஊழல், சர்வாதிகாரம், அராஜகம் என்ற கோஷத்தைப் பாடிவருகின்றனர்.

பா.ஜ.க. மதவாதசக்தி என்று தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகியவர்கள் கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் தனித்து நின்றிருந்தால் பாராட்டியிருக்கலாம். ஆனால், அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்து சில இடங்களை வென்றுவிட்டு இப்போது மீண்டும் அ.தி.மு.க. எதிர்ப்பு கோஷமிடுவது எப்படி சரியாகும்? தேர்தலுக்காக எதை வேண்டுமானாலும் சமரசம் செய்து கொள்வதா?

பா.ம.கவுடன் கைகோர்த்து அ.தி.மு.க. அரசைக் கடுமையாக விமர்சித்து வந்த விடுதலைச் சிறுத்தைத் தலைவர்கள் இன்று அம்மா புகழ்பாடி வருகின்றனர். 'அடிப்படை யிலேயே வேறுபட்டுள்ள நீங்கள் எப்படிக் கூட்டணி வைத்துள்ளீர்கள்?' என்று கேட்டால், ''இது தேர்தல் கூட்டணி அப்படித்தான்'' என்கிறார்கள். தேர்தலுக்குக் கொள்கை எல்லாம் கிடையாது என்ற அவர்களின் புதிய கோஷம் விசித்திரமாக உள்ளது.

அதேபோல் ஏகபோகத்தைக் கடுமையாக எதிர்க்கும் கம்யூனிஸ்ட் கட்சிகள் கேபிள் இணைப்பு விவகாரத்தில் மௌனமாக இருக்கின்றன. டாடா விவகாரத்தில் கூட கம்யூனிஸ்ட்கள் குறிப்பாக எதையும் சொல்லவில்லை.

ம.தி.மு.கவின் ஊசலாட்டம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். தி.மு.கவின் வாரிசு அர

சட்டப்பேரவைத் தேர்தல் 2006

சியலை எதிர்த்து வெளியேறி புதிய கட்சி தொடங்கி அதே நிலையைத் தொடர்ந்து கடைப்பிடித்திருந்தால் இன்று அ.தி.மு.கவுக்கு மாற்றாகக் கூட வளர்ந்திருக்கலாம். ஆனால், தி.மு.க. எதிர்ப்பைக் கைவிட்டு தந்தை - மகன் உறவு கொண்டாடியது. பொடாவில் கைது செய்த அ.தி.மு.கவுடனே மீண்டும் உறவு கொண்டாடியது எனத் தொடர்ந்து நிலை மாறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆம்! இந்தத் தேர்தலில் பெரும்பாலான கட்சிகள் கொள்கைகளை மறந்துவிட்டு வெறும் அதிகாரம், ஆட்சி, பதவிதான் முக்கியம் என்று சொல்லாமல் சொல்லி களம் இறங்கியுள்ளன. வாக்காளர்கள் இதை எல்லாம் மௌனமாகக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். மே 8ஆம் திகதி அளிக்கும் தீர்ப்பில் இதற்குப் பதில் கிடைக்கும்.

*(நன்றி: தினமணி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் 7 திட்டங்களுக்கு அங்கீகாரம்

தென்மராட்சி,மே2

சாவகச்சேரி நகரசபையினால் இவ்வருடத்தில் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் ஏழு வேலைத் திட்டங்களுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து ஆறு வேலைத் திட்டங்களும் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து ஒரு வேலைத்திட்டமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டத்தில் கயிலாயபிள்ளை வீதி, காளிகோயில் வீதி, அம்மன் கோயில் வீதி, முதலாம் ஒழுங்கை, கத்தாப்படி ஒழுங்கை,.பெரிய அரசடி வீதி, மட்டுவில் நுணாவில் எல்லை வீதி ஆகியவையும் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைத்திட்டத்தில் நகரசபை கட்டடத் திருத்தவேலையும் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-117)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 - 12 - 1987 | உதிர்வு 02 - 05 - 2004



**பாலச்சந்திரன் மகிஷன்**

(வணிகப் பிரிவு - 2006 மாணவன் மத்திய கல்லூரி)

தீராத வேதனையால் தினந்தினம் தவிக்கின்றோம்
மாறாத சோகத்திலே ஈராண்டுகள் கழிந்தனவே
உன்பாசம் வேண்டி தினந்தவித்து
உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*பிள்ளையார் கோயிலடி,*
*தாவடி கிழக்கு,*
*கொக்குவில்.* (49943)(32-14-15)

-குடும்பத்தினர்.

## தசாகாதி க்ரஹக்ரு அழைப்பு



*அன்புடையீர்!*
*நிகழும் விய வருஷம் சித்திரை 11 ஆம் நாள் (24.04.2006) திங்கட்கிழமை இரவு சாக்தமுக்தியடைந்த*

பிரம்மஸ்ரீ
**இரத்தின ஐயர் குகதாஸ ஐயர்**
அவர்களின்

*ஆத்ம சாந்தியை முன்னிட்டு பின்வரும் திகதிகளில் நடைபெறும் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்:*

| | | |
|---|---|---|
| தசாகம் | 03-05-2006 | புதன்கிழமை |
| ஏகோதிஷ்டம் | 04-05-2006 | வியாழக்கிழமை |
| சபிண்டீகரணம் | 05-05-2006 | வெள்ளிக்கிழமை |
| க்ரஹயக்ஞம் (சமாராதனை) | 06.05.2006 | சனிக்கிழமை |

(49933)(51-32-14-15)

இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கள் மற்றும் நேரிலும் தொலைபேசியிலும் அனுதாப ஆதரவுகளைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**169/7, கடற்கரை வீதி,**
**நீர்கொழும்பு.**
T.P.:031-2231676

**மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.**

## 3ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

அன்னையின் மடியில் 25 - 05 - 1977 | வேடனின் வலையில் 02 - 05 - 2003



**திருமதி திலகராஜா ஜெகத்ஜனனி**

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் J/51,52)

திதி: பிரதமை (14-05-2006)

*பிணம் தின்னும் கொடிய கழுகொன்று - உன்*
*உயிரைப்பறித்ததனால்*
*இடிந்து போனதம்மா எம் இதயம்*
*நீ சென்ற பயணத்தின் சாலை முடிந்து*
*திரும்பி வருவாயென காத்திருக்கும்*
*ஒவ்வொரு விடியலும் பொய்த்துப்போக*
*தேற்றுவாரின்றி உள்ளம் - உன்*
*நினைவுகளால் ரணமாய் ஆனதம்மா*
*கண்மூடி உறங்கியது போதும் என்று*
*ஓடி வாராயோ ஜனா.*

(49887)(26-32-14-15)

முகவரி:-
*கரம்பொன்தெற்கு,*
*ஊர்காவற்றுறை.*

என்றும் உன் நினைவுகளுடன்:
பிள்ளைகள் - தி.துவாரகா, தி.துஷானி
அம்மா, தங்கைமார் மற்றும் உறவினர்.

# போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம்,மே2

முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தவறுதலான விபத்தின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வீரவேங்கை இன்பாலன் (கந்தசாமி பிரேம்நாத் - முதலாம் வட்டாரம், நயினாதீவு) என்பவரே சாவடைந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (3-204)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே2

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய பிள்ளையார் வாசல் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9 மணியளவில் தேர்த்திருவிழாவும் 13ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (3-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே2

இருபாலை கிழக்கு ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்ட மகாகும்பாபிசேகம் நாளை புதன்கிழமை காலை 6.44 மணி முதல் 8.43 மணி வரை நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிசேகத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவர். (3-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே2

அல்வாய் சாமணந்துறை ஆலமரப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 12ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

பூங்காவனத்துடன் திருவிழா நிறைவடையும். (3-203)

# திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மே2

யாழ்.கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு I (தரம் 1, 2) - ஞா.ஆன்றீசிகா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் பாடசாலை), சி.கரணீதரன் (யாழ்.சென்.பெனடிக் வித்தி.), ம.ஜெனோவா (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

கீழ்ப்பிரிவு II (தரம் 3, 4, 5) - அ.அமிர்தவர்சினி (மானிப்பாய் சோதிவேம்படி வித்தி.), த.நிலக்ஷிகா (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.), த.வரதராஜினி (கல்வியங்காடு இ.த.க. பாடசாலை).

மத்தியபிரிவு - க.ஜவானி (இந்து மகளிர் கல்லூரி), க.ஜஸ்மிதா (இணுவில் இந்துக் கல்லூரி), க.ஜசிந்தா (கொக்குவில் இந்து).

மேற்பிரிவு - க.கனகதுர்க்கா (வேம்படி மகளிர் கல்லூரி), சி.துஸ்யந்தி (இந்து மகளிர் கல்லூரி), யோ.சரண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

அதிமேற்பிரிவு - ம.குருப்பிரியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), கி.நிரோஜா (சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), ஜெ.பத்மலோஜினி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

விசேட பரிசில் பெறுபவர் தரம் 1 - இ.ஜெனோஜன் (நவாலி சென்.பீற்றேர்ஸ் ம.வி.). (3-13-203)

# பரீட்சைக்குச் சென்ற மாணவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

யாழ்ப்பாணம்,மே2

படவரைஞர் பரீட்சைக்காகச் சென்ற மாணவர்கள் பரீட்சை நடைபெறாததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தால் கடந்த சனிக்கிழமை படவரைஞர் பரீட்சை நடத்தப்படவிருந்தது. இதற்கென அனுமதி அட்டைகள், பரீட்சை நேர அட்டவணை என்பன பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

ஆயினும், பரீட்சை எந்தவித முன்னறிவித்தலுமின்றி ஒத்திவைக்கப்பட்டது. இதனால் பரீட்சைக்கெனச் சென்ற மாணவர்கள் [illegible] ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (3-202)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 04 - 1939 | மறைவு 06 - 05 - 2003



அமரர்
**பொன்னுத்துரை கணநாதன்**

மூன்று ஆண்டுகள் மறைந்தாலும் - உங்கள்
அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும் வரை என்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்

*இணுவில்மேற்கு,*
*இணுவில்.* (49930)(51-32-14-15)

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*மண்ணில்* 04 - 06 - 1943 | *விண்ணில்* 15 - 03 - 2005



அமரர் **நாகன் சோதிலிங்கம்**

*(இளைப்பாறிய கட்டடத் திணைக்கள படவரைஞர்)*

திதி : 02.05.2006

குலவிளக்கே அணைந்தாலும் குறையேதும் வைக்கவில்லை
ஓராண்டு சென்றாலும் ஓயவில்லை எம் துயரம்
ஆறாகப் பாய்ந்து வந்து ஆற்றிடுவாய் எம் துயரை
மாறாக நாம் உமது மாண்பிற்காய் வேண்டுகிறோம்.

*மணிமகால்,*
*இமையாணன்.* (C/49145) (51.32.14.15)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 - 12 - 1974 | உதிர்வு 13 - 05 - 2005



திருமதி
**திருமகள் கார்த்திகேயன்**

(B.Sc, (Hons), M.Sc(LIS)

*[விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்]*

திதி: 02.05.2006

எம் முற்றத்து மல்லிகையே!
முட்களில்லா ரோஜாவே
சுற்றத்தவர் போற்றச்
சுடர்தந்த ஒளிவிளக்கே
வண்ணத்துப்பூச்சியென
வட்டமிட்ட பொன்மகளே!
பெற்றவர்களோடு உடன்பிறப்பு
உறவுகளும்
கற்றவையில் முந்தும் கணவனையும்
யாவரையும்
கண்ணீரிற் தோயவிட்டு(க்)
காலனிடம் நடந்தாய்
ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
எங்கள் உயிர்
எம்மிடத்தில் உள்ளவரை
நீயிருப்பாய் எங்கள் நெஞ்சங்களில் என்றும்...

எங்கள் இதயக்கோயிலின் இதயதீபம்
அணைந்து ஆண்டொன்று ஆனதோ?
விழிதேடும் இடமெல்லாம் உம் விம்பமே
தெரிகின்றது கண்கள் தினம் சொரியும்
கண்ணீர்ப் பூக்களாலேயே அஞ்சலி செலுத்துகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**அன்புக் கணவர், பெற்றோர், சகோதரர்கள், மாமா, மாமி, மைத்துனர் மற்றும் உறவினர்கள்.**

*26/2, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (49845)(51-32-14-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அண்மையில் ஏ-9 வீதி ஒரு தலைப்பட்சமாக மூடப்பட்டதையடுத்து வன்னி மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பாதை மீண்டும் திறக்கப்பட்ட பின்னரும் எரிபொருள் தட்டுப்பாடு நீங்கவில்லை.

வன்னிப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் எரிபொருள் நிரப்புவதற்காகக் காத்திருக்கும் வாகன உரிமையாளர்களையும் - கடைகளில் எரிபொருள்கள் இல்லாது வெற்றுப் போத்தல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

## வட்டக்கச்சி வர்த்தகர்களுக்கு அரசியல் கருத்தரங்கு

வட்டக்கச்சி,மே.2

வட்டக்கச்சிப் பிரதேச வர்த்தகர்களுக்கும் வர்த்தக நிலைய பணியாளர்களுக்குமான சம கால அரசியல் கருத்தரங்கு கடந்த 26ஆம் திகதி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து தூயவன் அரசறிவியல் கல்லூரியின் பொறுப்பாளர் சுயியன் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக சிறப்புரை ஆற்றினார்.தொடந்து முன்னாள் வர்த்தக சங்கத் தலைவரும் போராளியுமான சுரேஸ் உரையாற்றினார்.

இறுதியில் வர்த்தக்கர்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.இதி ல் பெரும் எண்ணிக்கையான வர்த்தகர்களும், பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

(எ-405-202)

## முன்னரங்கநிலைப் போராளிகளுக்கு புளியங்குளம் மக்கள் உலர் உணவு

புளியங்குளம், மே.2

புளியங்குளம் பிரதேச மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளான விளக்குவைத்த குளத்திற்குச் சென்று போராளிகளுக்கு உலருணவுப் பொருள்களை வழங்கினர்.

கடந்த 21 ஆம் திகதி பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் கந்தசாமி தலைமையில் உலருணவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கருத்துரைகளை புளியங்குளம் ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் சு.ஜெயரூபன் , கிராமனூர் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் ப.பரசுராமன் , புளியங்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை வவுனியா மாவட்ட தளபதிகளில் ஒருவரான அப்பன் நிக்ழ்த்தினார்.

(எ-355-202)

## அக்கராயன் மகாவித்தியாலயத்தில் மாணவருக்கு விடுதி வசதி இல்லை

அக்கராயன், மே2

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்குரிய விடுதி வசதிகள் இல்லாமையினால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கிளிநொச்சி மேற்கில் உள்ள பாடசாலையில் சுமார் ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் அம்பலப்பெருமாள்குளம், கோட்டை கட்டிய குளம், 4 ஆம் கட்டை யூனியன் குளம், கோணாவில் கண்ணகை புரம், மணியங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி பயில்கின்றனர்.

எனினும் தூரப் பிரதேசங்களில் இருந்து வருகைதரும் மாணவர்கள் இங்கு தங்கி நின்று கல்வி கற்க முடியாத நிலை காணப்படுகிறது.

பாடசாலையில் விடுதிகள் இல்லாத குறை தொடர்பாக ஆசிரியர்கள், பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-420)




## 'போரூட்' நிறுவன உதவியுடன் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி

புளியங்குளம், மே2

வவுன்யா வடக்கு, புளியங்குளத்தில் 'போரூட்' நிறுவன நிதி உதவியுடன் வவுனியா மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் கடந்த 17 ஆம் திகதி பெண்களுக்கான தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டப் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன பணிப்பாளர் பத்மாவதி இரவிக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரை புளியங்குளம் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் இந்திரன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை வவுனியா மாவட்ட பெண்கள் அரசியல்துறைப்பொறுப்பாளர் த.ஆவர்த்தனா ஏற்றினார்.

நிறுவனக்கொடியினை நிறுவன நிர்வாக அலுவலர் திருமதி வி.நகுலேஸ்வரி ஏற்றினார். அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு 'போரூட்' நிறுவனப் பிரதிநிதி இ.தீபா சுடரேற்றி மாலை அணிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆவர்தனா, புளியங்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இந்திரன், போரூட் நிறுவன பிரதிநிதி ஆகியோர் வழங்கினர்.

(எ-355-202)

## வர்த்தக நிலையங்களின் சுற்றாடலில் சுகாதாரம் பேணுமாறு அறிவுறுத்து

பூநகரி,மே 2

பூநகரிப் பிரதேச வர்த்தக நிலையங்களின் சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்திருக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

பிரதேசத்தின் வர்த்தக நிலையங்களுக்கு அருகில் குப்பை கூழங்கள் நிறைந்தள்ளதுடன், புற்களும் பெருமளவில் வளர்ந்துள்ளன. இதனால் சுகாதாரச் சீர்கேடும் நிலவுகின்றது.

வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தங்கள் நிலையத்திற்கு அருகிலுள்ள குப்பைகூழங்களை அகற்றுவ்துடன் புற்களையும் வெட்டுமாறும் -

தவறும் பட்சத்தில் சுற்றாடல்சுகாதாரச் சட்டத்திற்கு அமைவாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழீழ சுகாதார சேவையினரின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் தெரிவித்துள்ளார். (எ-403-202)


## விழிப்புணர்வுக் கண்காட்சி

கிளிநொச்சி, மே2

தமிழீழ சுகாதார சேவை'ினரால் காச நோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கண்காட்சி, வீடியோ படக்காட்சி, விழிப்புணர்வுக் கருத்தரங்கு என்பனவற்றை நடத்திவருகின்றனர்.

கடந்த 24 ஆம், 25 ஆம், 26 ஆம் திகதிகளில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம், முல்லைத்தீவு ம.வி., வள்ளிபுனம் கனிஸ்ர உயர்தர வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கரருத்தரங்கு, கண்காட்சி, படக்காட்சி என்பன நடத்தப்பட்டுள்ளன.

( எ-202)



வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியின் போது எடுக்கப்பட்ட படம் இது. உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பா. ஜெயசீலன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் சு.செல்வரத்தினம், கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் சு.சகாயராசா, உப அதிபர் சி.ஸ்ரீரஞ்சன் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (எ-16)

## வன்னேரிக்குளம் கிராமத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

அக்கராயன்,மே.2

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் கிராமத்தில் கல்வி விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கண்காட்சியும் இடம்பெறவுள்ளன.

வன்னேரிக்குளம் கிராமத்தில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் பெற்றோர்களுக்கும் கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களை பாடசாலைக் கற்றலில் இணைத்தல், ஆரம்பக் கல்வி மாணவர்களின் திறன்களை வளர்த்தல் என்பற்றை நோக்காகக் கொண்டு இக் கல்விக் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம், குஞ்சுக்குளம், ஐயனார்புரம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை இலக்காகக் கொண்டு நடத்தப்படவுள்ள கண்காட்சியில் மாணவர்களின் ஆற்றுகைகளும் இடம் பெறவுள்ளன.

(எ-420)

## அடிப்படை வசதிகள் இன்றி வெட்டுக்காடு மக்கள் சிரமம்

பூநகரி,மே 2

கிளிநொச்சி மாட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வெட்டுக்காடு கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

1991 ஆம் ஆண்டு பூநகரி மீது படையினர் மேற்கொண்ட வலம்புரி ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மேற்படி கிராம மக்கள் 2003 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்தனர்.

எனினும் இவ்வாறு மீளக்குடியமர்ந்தவர்களுக்கு இதுவரை அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.இதனால் இந்தக் கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குடிதண்ணீர் வசதி, வீதி புனரமைப்பு , அடிப்படை சுகாதார வசதி, கல்வி போன்றவை இன்றி இவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்பட்டது.

எனவே, உரிய தரப்பினர் இவ்விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-403-202)

## வேரவில் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் பழுது நோயாளரை ஏற்றிச் செல்வதில் சிரமம்

பூநகரி,மே2

பூநகரி வேரவில் வைத்தியசாலையில் பாவனையில் இருந்த அம்புலன்ஸ் பழுதடைந்துள்ளது. இதனால், நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகக் கூறப்பட்டது.

அம்புலன்ஸ் பழுதடைந்ததையடுத்து அதனைத் திருத்துவதற்கென சுகாதாரத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட [illegible] எடுத்துச் சென்றுள்ளனர்.

[illegible] அம்புலன்ஸ் திருத்த வேலைகளுக்கென எடுத்துச்செல்லப்பட்டு 15 நாள்கள் கடந்தும் இதுவரை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வந்து சேரவில்லை என்றும் -

இதனால், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

வேரவில், கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, பாலாவி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-403-202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

02.05.2006









02.05.2005 இல்
பிறந்த
**திரு. திருமதி ஜெயந்தன் விஜிதா**
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**ஜனுஷன் (ஜனு)** அவர்கள்
தனது முதலாவது பிறந்தநாளை 28.05.2006 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4 மணியளவில் ஜேர்மனியிலுள்ள
St.Anto Kirche, Kannenfeldstrasse 35, 4056 Basei இல்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
திரு.திருமதி ஜெயந்தன்-விஜிதா
தம்பதியர்.
(ஜேர்மன்).

செல்வன் ஜனுஷன்

(49827) (39-14-45)

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
03 . 03 . 1940
இறப்பு
23 . 04 . 1981

**அமரர் அப்பையா பாலசிங்கம்** (பரமசாமி)
*(வாகன விற்பனையாளர்)*
திதி: 02.05.2006

எங்களை இவ்வுலகில் கல்விச் செல்வம் பொருட்செல்வம் என்பனவற்றில் சிறந்து விளங்க வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வத்தை அன்புடன் நினைவு கூருகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அம்மா, மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளை, சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மை...
உறவினர், ...

81/உ, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(49940) (39-14-45)

**சீரணி நாகபூஷணி இன்று கொடியேற்றம்**

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த பெரும் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 13 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் மாலை 5.30 முதல் 6.30 வரை சமயச் சொற்பொழிவு நடைபெறும். (எ-135)

**கைத்தொழிலாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்**

வலி.தென்மேற்கு (சண்டிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவு கைத்தொழிலாளர் சங்கத்தின் அங்குரார்ப்பண பொதுக் கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் பிரதேசத்திலுள்ள கைத்தொழிலாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என்றும் -

நிர்வாகிகள் தெரிவும் இதில் இடம் பெறவிருப் பதாகவும் - பிரதேச செயலகம் ... தெரிவித்தது. (எ-135)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 17.11.1953 மறைவு 13.05.2005
திதி: பஞ்சமி

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய்
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்திருந்து வானுறையும்
தெய்வத்துள் கலந்து
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் அகலாது.

**அப்புத்துரை தேவராஜா**
(சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்,
காங்கேசன் ஹாட்வெயர் உரிமையாளர்)

தையிட்டி,
காங்கேசன்துறை.
(49937) (39-14-45)
- குடும்பத்தினர்.

## ஆறாத்துயரில் 31ஆம் நாள்



பூமியில் 07 - 06 - 1917
வானுலகில் 02 - 04 - 2006

**திருமதி பூரணம் சுப்பிரமணியம்**

பெற்று வளர்த்துப் பேருமிட்டு
பெருமையுடன் எமை வளர்த்த
அம்மா உனைப் பிரிந்து
எப்படித்தான் வாழ்ந்திடுவோம்?
ஆனதே ஒரு மாதம் மறந்தோமா?
உம் நினைவை
உன் நாமம் எம் நாவில்
நாளும் நிறைந்திருக்கும்
பூமியில் பிறந்தார் இறப்பது
இயற்கை எனத் தேறிடுவோம்.

116/4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்

(49931) (39-14-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்புத்திட்டத்தில் தெரிவானோர் பிரதேச செயலரிடம் பதிய அறிவுறுத்து

## யாழ். அரச அதிபர் விடுத்துள்ளார்

யாழ்ப்பாணம்,மே2

வடக்கு - கிழக்கு வீடமைப்புப் புனர்நிர் மாணத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட வீடமைப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ். மாவட்டப் பயனாளிகள் திட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைவான குறிப்பிட்ட ஆவணங்களைத் தத்தம் பிரதேச செயலாளர்களிடம் சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கேட்டுள்ளார்.

இரண்டாம் கட்ட வீடமைப்புப் பணிக்கென யாழ். மாவட்டத்தில் 103 கிராமங்களைச் சேர்ந்த 4ஆயிரம் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பயனாளிகளின் தகவல்களின் அடிப்படையிலேயே தெரிவு இடம்பெற்றது.

எனவே, பயனாளிகள்

* தமது வீடுகள் யுத்தத்தால் பாதிப்படைந்தமையை உறுதிப்படுத்தும் ஆவணம்.
* வீடு மீள் நிர்மாணம் செய்ய உத்தேசிக்கும் காணியின் சட்டபூர்மான ஆவணம்.
* மாத வருமானம் 2 ஆயிரத்து 500 இற்குக் குறைவானது என உறுதிப்படுத்தும் கடிதம்.
* இடம்பெயர்ந்த குடும்பத்தவர்கள் மீளவும் அக்காணியில் குடியேறியுள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் கடிதம்.
* அக்கிராமத்தில் நிரந்தரமாக வசிக்கும் வதிவிடச் சான்றிதழ்.

ஆகிய ஆவணங்களைப் பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கவேண்டும்.

பொதுமக்களால் தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள், முறைப்பாடுகள் என்பவையும் கவனத்தில் எடுக்கப்படும்.

தரவுகள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மாற்றங்கள் ஏற்படுமிடத்து அரச அதிபரின் அனுமதியுடன் பொது இடங்களைப் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (3-202)

# செம்மணி வீதி ஊடான பஸ் சேவை இப்போது இல்லை

நல்லூர்,மே 2

போதிய பஸ்கள் இன்மை மற்றும் காப்பாளர் பற்றாக்குறை காரணமாக கொடிகாமம் - யாழ்ப்பாணம் பஸ் சேவையை செம்மணி வீதியூடாக நடத்தமுடியாதுள்ளது என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். டிப்போ முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள், நோயாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு செம்மணி வீதியூடாக யாழ்ப்பாணம் - கொடிகாமம் பஸ் சேவையை நடத்துமாறு நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையத்தினர் இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். டிப்போ பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேற்படி வீதித் தடத்தில் பஸ் சேவையை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் தற்போதைக்கு இல்லை. பஸ் பற்றாக்குறை, காப்பாளர் பற்றாக்குறை என்பன நீங்கும் பட்சத்தில் பஸ் சேவையை நடத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் பொதுமுகாமையாளர் சனசமூக நிலையத்திற்குத் தெரிவித்துள்ளார். (3-111-202)

# சம்பூரில் சிறுவர் கொல்லப்பட்டதை 'யுனிசெவ்' கண்டிக்காதது ஏன்?

## மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கேள்வி

திருகோணமலை,மே2

திருகோணமலை சம்பூரில் படையினர் மேற்கொண்ட மும்முனைத் தாக்குதல்களின் போது சிறுவர்கள் பலர் கொல்லப்பட்டனர். ஆனால், அது குறித்து 'யுனிசெவ்' அமைப்புக் கண்டனம் எதையும் வெளியிடாதது ஏன்?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழீழ மாணவர் அமைப்பின் திருமலை மாவட்டப் பொறுப்பாளர் புரட்சி.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இக்கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறுவர் நலன்களைக் கவனிக்கும் அமைப்பான 'யுனிசெவ்' விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதாக அடிக்கடி குற்றச்சாட்டுக்களை வெளியிட்டு வருகின்றது.

சம்பூரில் பல சிறுவர்கள் இராணுவத்தின் தாக்குதலில் உயிரிழந்தனர். அது தொடர்பாகக் கண்டனம் எதையும் அந்த அமைப்பு வெளியிடாதது அந்த அமைப்பு மீது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அமைப்பின் செயற்பாடுகள் கேள்விக்குரியதாக இருக்கின்றன. ஏமாற்றமடைந்துள்ளோம். அந்த அமைப்பு ஒரு தலைப்பட்சமாகச் செயற்படுகின்றதா என்ற ஐயம் எழுகின்றது.

தெற்கு இனவாதச் சக்திகளுக்கு அஞ்சி கருத்து எதையும் வெளியிட 'யுனிசெவ்' பின்னடிக்கின்றதோ என்றும் சிந்திக்க வைத்துள்ளது - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# மருந்தாளர் பயிற்சிநெறி

வலி.தென்மேற்கு,மே 2

வேலணை அரசினர் வைத்தியசாலையின் மருந்துக் கலவையாளரும் அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் தலைவருமான ரி.உருத்திரா மருந்தாளர் பயிற்சி நெறியில் மருந்தாளராகப் பயிற்சி பெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் இம் மாதம் 17ஆம் திகதி முதல் களுத்துறையிலுள்ள மருந்தாளர் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றுவருகின்றார்.

இதேவேளை -

கொடிகாமம் மற்றும் கோப்பாய் அரச வைத்தியசாலைகளின் மருந்துக் கலவையாளர்களான இரண்டு பேரும் மருந்தாளர் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டு அங்கு பயிற்சிபெற்றுவருகின்றனர். (3-135)

# மட்டக்களப்பு சந்தையில் கைதான இளைஞர் விடுவிப்பு

மட்டக்களப்பு, மே 2

கடந்த சனிக்கிழமை வாழைச்சேனை சந்தைப் பகுதியில் வைத்து பொலீஸாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியின் தலையீட்டை அடுத்தே இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை வாழைச்சேனை சந்தைப்பகுதி பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. அதன்போது பல இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டனர்.

இந்த விடயம் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் பொலீஸாருடன் தொடர்புகொண்டதையடுத்து பலர் விடுவிக்கப்பட்டனர். ஆயினும், 9 இளைஞர்கள் மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதுதொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட பொலீஸ் அத்தியட்சகருடன் தொடர்புகொண்டதையடுத்து அந்த இளைஞர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்தியபின் விடுவிப்பதாகப் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-202)



ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்புப் பிரதேசத்தில் வேள்ட் விஷன் நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட சிறுவர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பெண்களுக்கான கிரிக்கெட் ஆட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

# பூநகரிப் பிரதேச உதைபந்தாட்டம் முழங்காவில் விநாயகர் அணி சம்பியன்

வெள்ளாங்குளம்,மே2

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்ற பெரு விளையாட்டுப்போட்டியில் உதைபந்தாட்டத்தில் விநாயகர் அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது.

இந்தப் பெருவிளையாட்டுப் போட்டிகள் கடந்த மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரிவான வலைப்பாடு ஜெகமீட்பர் அணியும் முழங்காவில் விநாயகர் அணியும் மோதிக்கொண்டன.

முழங்காவில் விநாயகர் அணி ஒரு கோலால் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தெரிவானது.

நாகபடுவான் பல்லவன் விளையாட்டுக் கழக அணி, முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக அணி ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற இறுதியாட்டதில் விநாயகர் அணி தண்ட உதைமூலம் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது. இந்தப் போட்டிகள் யாழும். வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன. (3-415-203)

## தடகளப்போட்டி

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படும் வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாளும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இப்போட்டி நடைபெறும். (3-135)

# யாழ். கோட்ட மட்டத்திலான தடகளப்போட்டி முடிவுகள்

யாழ். கோட்ட மட்டத்திலான தடகளப் போட்டியின் முடிவுகளில் ஒரு பகுதி நேற்று வெளியாகியிருந்தது. இன்னுமொரு பகுதி இன்று வெளியாகின்றது.

*ஈட்டி எறிதல்* - கார்த்திகா சிறிகாந்திதாசன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தர்மினிதர்மலிங்கம் (திருக்குடும்ப கன்னியர்மடம்), மதுமிலா (அன்ரனி குணராசா (வேம்படி மகளிர் கல்லூரி) -

*4X100 அஞ்சல் ஓட்டம்* - திருக்குடும்ப கன்னியமடம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி.

17 வயதுப் பிரிவு

*100 மீற்றர் ஓட்டம்* - வாகினி இரகுநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), ஐஸ்மிலா எட்மன் லெஸ்லியஸ்ரின் (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி.), இமெல்டா டொம்ராஜ் (திருக்குடும்ப கன்னியர் மடம்).

*200 மீற்றர் ஓட்டம்* - வாகினி இரகுநாதன்(வேம்படி மகளிர் கல்லூரி), ஐஸ்மிலா எட்டன் லெஸ்லியஸ்ரின் (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி.), யனுஷா அருளம்பலம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

*400 மீற்றர் ஓட்டம்* - நிர்த்திகா சம்பந்தநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), யனுசா அருளம்பலம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெனிற் டிசானி அல்பிரட் பிரான்ஸிஸ் பிறேமராசா (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி.).

*800 மீற்றர் ஓட்டம்* - நிர்த்திகா சம்பந்த




நாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), ஜெனிற் டிசானி அல்பிரட் பிரான்சிஸ் பிறேமராசா (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி.), ஏஞ்சலீன் (புனித சாள்ஸ் ம.வி.).

*1500 மீற்றர் ஓட்டம்* - நிர்த்திகா சம்பந்தநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), ராஜாசோபனா பரமயோகநாதன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), சிபோறா அலெக்ஸ்சாண்டர் (புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை).

*நீளம் பாய்தல்* - கஜீத்தா விமலநாதன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), நிலோஜினி டெஸ்மன் (புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை), சிவசக்தி சுதர்சனா (வேம்படி மகளிர் கல்லூரி), இமெல்டா டொரம் ராஜ் (திருக்குடும்ப கன்னியர்மடம்).

*மூப்பாய்ச்சல்* - கஜீத்தா விமலநாதன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மீனிலா ரகுவேந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி), பானுப்பிரியா யேசுதாசன் (புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலம்).

*உயரம் பாய்தல்* - கஜீத்தா விமலநாதன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மரியா றுவீனா அன்ரன் மகேந்திரன் (திருக்குடும் கன்னியர் மடம்), சானுஜா ரவி (திருக்குடும்ப கன்னியர்மடம்).

*குண்டுபோடுதல்* - நுஷா ஜெயச்சந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி), பிரியா ஜெயலிங்கம் (வேம்படி மகளிர் கல்லூரி), றூபினி சிறீதரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

*தட்டு எறிதல்* - ரூபினி சிறிதரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பிரியா ஜெயலிங்கம் (வேம்படி மகளிர் கல்லூரி), தர்சிக்கா தசாணி வின்சன் ஜேசப் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

*ஈட்டி எறிதல்* - ரூபினி சிறிதரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), யசோதரா சிறிஸ்கந்தராஜா(வேம்படி மகளிர் கல்லூரி), மெடோனா (புனித சாள்ஸ் ம.வி.).

*4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்* - வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் ம.வி.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி நடக்கப்போவது பேச்சோடு போர்! போரோடு பேச்சு!!





**வியட்நாம் வரலாற்றைப் போல் ஒரு கையில் தொழில் கருவியையும் மறுகையில் ஆயுதத்தையும் ஏந்துகிற காலம் வந்துவிட்டது என்று தெரிவித்திருக்கிறார் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்.**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரலின் 'அரசியல் அரங்கம்' நிகழ்வில் சனிக்கிழமை (29.04.06) அவர் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம் இது.**

ஈழநாதத்தின் தலைப்புச் செய்தியாக சிறிலங்கா இராணுவம் - ஒட்டுக்குழுக்களின் அராஜகம் - ஜெனீவா பேச்சின் பின் 103 அப்பாவித் தமிழர்கள் படுகொலை' என்று இடம்பெற்றுள்ளது.

சிங்களம் எப்போதும் எங்களோடு பேசும் மொழி. "இராணுவப் படுகொலை மொழி" என்பது மீண்டும் நிருபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிருபணத்தின் ஊடே மூன்று விடயங்களை முன்வைக்கிறோம்.

முதலாவது மஹிந்தரின் உத்தி என்ன என்பது தெளிவாகத் தெரிகிறது. போருக்கு முன்னைய சிறிய போரை அல்லது நிழல் போரை நடத்த தயாராகிவிட்டார். அவர் சொன்னதுபோல, "மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை அவர் இடைநிறுத்தியிருக்கிறார்" என்கிற அளவில் அவரது போர் உத்தி நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகவே போரை நடத்துவதற்கு முன்னர் இன்னொரு சிறிய போரை நடத்த அவர் ஆயத்தமாகிவிட்டார் என்பது தெளிவாகிறது.

இரண்டாவது வழமைபோல் இந்தப் படுகொலைகளைப் பார்த்து உலகம் மௌனம் காத்தது எங்களை மனம் நோக வைத்தது.

சர்வதேசத்தையே கண்டனம் செய்து விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்த அறிக்கையை மிகமுக்கியத்துவம் கொடுத்து சர்வதேச ஊடகங்கள் யாவும் வெளியிட்டன என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

- இனிமேல் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வேலையை உலகம் தொடங்கிவிட்டது.

- புலிகள் மேல் தாங்கள் அழுத்தம் கொடுக்கப் போகிறோம் என்பதை மௌனம் காத்ததன் மூலமும் பேசாதிருந்ததன் மூலமும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

அதேவேளை -

சம்பூர் படுகொலைகளைத் தாங்கள் கவனிக்காமல் இல்லை என்பதற்காக அறிக்கையையும் வெளியிட்டுள்ளனர்.

தொடக்கத்தில் ஒடுக்கப்படுகிற மக்கள் மீது கருணை காட்டாமல் ஒடுக்குகிற அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுகிற இயக்கத்தை ஒரு தரப்புக்குக் கண்டனம் செய்தது. இப்போது இருதரப்புக்கும் கண்டனம் செய்ய முனைந்துள்ளது.

ஒடுக்குகிற அணியையும் ஒடுக்கப்படுகிற அணியையும் ஒரே தட்டில் - தராசில் - வைத்துக் கண்டனம் செய்வது நம்பமுடியாத ஒரு செய்தியாக உள்ளது.

எது சரி? எது தவறு என்பதை உலகத்தால் கணிக்கமுடியாது இருப்பது கூட எங்களுக்குக் கிடைத்த வெற்றியாக நாங்கள் பார்க்கிறோம்.

ஆக, விரைவில் உலகம் ஒரு முடிவை எடுக்கவேண்டும். ஒருதரப்பை உலகம் கண்டனம் செய்ய வேண்டும். அது எந்தத் தரப்பு என்பது காலம் சொல்லப் போகிற பதிலாக இருக்கும். அதற்காகத்தான் நாங்கள் நீண்ட மௌனத்தை காத்துக் கொண்டு வருகிறோம்.

இன்னொரு ஒரு முக்கிய செய்தியை இந்த இராணுவ நடவடிக்கை மூலம் எங்கள் மக்களுக்கு மஹிந்தர் சொல்லியிருக்கிறார்.

### மக்களே புலிகள்

மக்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் எதுவித வேறுபாட்டையும் இனி காணப் போவதில்லை என்பதை மஹிந்தர் விளக்கியுள்ளார்.

அதாவது மக்கள் ஒரு நிலையில் போராளியாக மாற வேண்டும் என்பதுதான் மஹிந்தரின் செய்தி. அப்படியானால் மக்கள் எப்போது போராளியாவார்கள்? மஹிந்தர் தான் நினைக்கிற போதுதான் நடக்கும். ஆக மக்கள் ஒரு புதிய பரிமாணத்துக்குப் போகவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள போராளியாக மாற வேண்டிய காலம் இது.

மக்கள் போராளிகளாக மாறி- மக்கள் படைகளைக் கட்டி - மக்கள் சேனைகளை உருவாக்கி - யுத்தம் நடத்தி வென்ற வரலாறு வியட்நாமில் நடந்திருக்கிறது.

வியட்நாம் பற்றி ஏற்கனவே நாம் பேசியிருந்தாலும் இப்போதும் சில கருத்துக்களை முன்வைக்கிறோம்.

வியட்நாமின் பழமொழி அல்லது புதுமொழியாக முன்னர் நாம் குறிப்பிட்டிருந்தோம்

"போரிடுங்கள் பேசுங்கள்!"

"பேசுங்கள் போரிடுங்கள்!"

### வியட்நாம் வரலாறு

இந்த மொழிக்கு ஊடாக வியட்நாமின் வரலாறு நடந்த விதமும் வெகுநுணுக்கமாகவும் இறுக்கமாகவும் இராணுவ, இராஜதந்திர அரசியல் வழிமுறைகளை ஒன்றிணைத்த மூலோபாயத்தை சுமார் 10ஆண்டு காலம் கடைப்பிடித்தனர்.

குறிப்பாக 1965ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டுக்கு இடையில் இந்த உத்திகளைக் கடைபிடித்து "விடுதலை ஒரு நாளில் வருவதில்லை - ஆனால் நீண்ட நாள்களுக்குப்பின் அது ஒருநாள் வரும்" என்ற செய்தியை 1973ஆம் ஆண்டு ஒப்பந்தம் மற்றும் 1975 ஆம் ஆண்டு படையெடுப்போடு வியட்நாம் நிருபித்தது.

10 வருடகாலமாக பேச்சும் போருமாக கழிந்த வரலாறு இன்றைக்கு தமிழீழப் போராட்ட வரலாற்றிலும் உருவாகிறது.

இனிமேல் பேச்சோடு போருமாக போரோடு பேச்சுமாக நடக்கப் போகிறது என்பதை நாங்கள் முன்கூட்டியே அறிவிக்கிறோம்.


இறுதியில் வியட்நாம் இராணுவ வழி மூலம் தனது வெற்றியைப் பெற்றுக் கொண்டது என்பதையும் நாம் இங்கே மனதில் கொள்ளவேண்டும்.

போரின் காரணமாக மிக உச்சக்கட்டமான இழப்பைச் சந்தித்த நாடு வியட்நாம், உதாரணமாக 1965ஆம் ஆண்டுக்கும் 1973 ஆம் ஆண்டுக்கும் இடையில் 14 மில்லியன் தொன் பீரங்கிக் குண்டுகள், வான்வழிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது இரண்டாம் உலகப் போரில் பாவித்ததைவிட 3 மடங்கு அதிகமாகும்.

இதேபோல் அண்மையில் எங்கள் சம்பூரில் ஒரு குறிப்பிட்ட தொகையான தொன் வெடிபொருள்கள் எங்கள் மக்கள் மீது கொட்டப்பட்டுள்ளன.

வியட்நாமிய மக்களின் மரபு ஒன்றை நாம் நினைவில் கொள்வோம்.

• வியட்நாமிய வரலாற்றில் அம்மக்கள் மூன்று விடயங்களை முக்கியமாகக் கொள்கிறார்கள்.



வீடு, நிலம் மற்றும் இறந்தவர்களது நினைவிடங்கள் ஆகியவற்றில் எதிரியானவன் எந்த வகையிலும் உள்நுழைய அனுமதிக்கக் கூடாது என்பது அவர்களது திடமான முடிவு.

"வீட்டில் வாழும்போது உயிரோடு வாழ வேண்டும் - உயிரற்ற நிலையில் நினைவிடங்களில் வாழவேண்டும்" என்பதை புனிதமாகக் கொண்டு இவற்றில் ஒரு வகையிலும் ஆக்கிரமிப்பாளன் கால் வைக்க விடக்கூடாது என்கிற அடிப்படையில் வியட்நாமிய மக்களின் போர் மரபு உருவானது.

அதேவகையில் உலக மக்களின் அனுபவங்களிலிருந்தும் தனக்கு வேண்டியதை வியட்நாம் கற்றுக்கொண்டுள்ளது.

ஜெனரல் ஜியாப் என்பவர் வியட்நாமின் முக்கிய தளபதி. மக்கள் சேனைகளைக் கட்டிய அனுபவம் உள்ளவர். அவரது நூல் ஒன்றின் கருத்துகளை முன்வைக்கிறோம்.

புரட்சிகர மக்களை ஆயுதபாணிகளாக்குதலும் மக்கள் படையும் என்று 1960களில் மார்க்சீச சிந்தனைகளின் அடிப்படையில் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டவைகளை எங்களுக்குப் பொருத்தமானவற்றை தெரிவு செய்து எங்கள் மக்கள் மனதில் கொள்வதற்காக சிலவற்றை தருகிறோம்.

"ஆயுதமேந்திய எழுச்சியிலும் புரட்சிகரப் போரிலும் அதேபோல் மக்கள் அனைவரும் பங்கு கொள்கின்ற தேசியப் பாதுகாப்பிலும் தேசிய விடுதலைப் போரிலும் அதுபோல் தாய் நாட்டைப் பாதுகாக்கும் போரிலும் வலிமை மிக்க ஒரு மக்கள் சேனையைக் கட்டும் போதே பரந்துபட்ட மக்கள் திரளினையும் ஆயுதபாணிகளாக்க வேண்டும். மக்களின் ஆயுதப்படைகளை மக்கள் சேனைகளின் அத்திவாரமாகக் கருத வேண்டும். மக்கள் சேனையை மக்கள் படையின் கூறாகக் கருத வேண்டும்" என்கிறார்.

இங்கே அவர் மக்கள் சேன்ன என்பதை நிரநதர இராணுவத்தையும் மக்களின் ஆயுதப் படை என்பதை மக்கள் பங்குபற்றக் கூடியதையும் கருத்தில் கொண்டு தெரிவித்துள்ளார்.

இத்தகைய முடிவுகளை எடுத்து வியட்நாமின் வரலாறு மாற்றியமைக்கப்பட்டது.

### வியட்நாமின் மக்கள் சேனை

வியட்நாமின் மக்கள் சேனை எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதைச் சொல்கிறோம்.

வியட்நாமின் மக்கள் படை என்பது - தற்காப்புப் படைகளும் குடிப்படைகளும் கெரில்லாப் படைகளுமாக வளர்ச்சியடைந்து இறுதியில் மக்களின் ஆயுதப் படைகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

முதலாவது பிரதான படை என்று சொல்லக் கூடிய நிரந்தரப் படை

இரண்டாவது பிரதேச படை என்பது பிரதேசங்களைக் காப்பதற்கான படை

மூன்றாவது குடிப்படை என்று சொல்லக் கூடிய மக்கள் அனைவரும் பங்குபற்றக் கூடிய ஒரு படையணியாக உருவாக்கப்பட்டது.

இதில் இராணுவ ரீதியாக நிரந்தரப் படை அணி என்பது மிக முக்கியமானது. நாடு முழுவதும் முக்கியப் போர்முனைகளில் பயன்படுத்தப்பட்ட இயங்கு படை இதுதான். எதிரியின் சேனையை குறிப்பாக இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இயங்கு படையை நிர்மூலமாக்குதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை இந்தப் படை மேற்கொண்டது.

ஒவ்வொரு போர் முனைகளிலிருந்தும் ஒவ்வொரு திட்டவட்டமான நிலைமைகள்-கடமைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப பிரதேச படைகள் கட்டப்பட்டன.

இதை ஜியாப் அவர்களின் வார்த்தைகளில் கூறினால்,

"பிரதேசங்களில் நடத்தப்படும் ஆயுதப் போராட்டத்தின் அடிப்படையாக அவை அமைகின்றன. வலுவான படை அலகுகளாக ஒழுங்கமைக்கப்பட்ட பிரதேச படைகள் போர் நடவடிக்கைகளில் தமது படைகளைத் தேவைக்கு ஏற்ப தேவையான இடங்களில் ஒன்று குவித்தும் பரவலாக்கியும்...." என்று அந்த வரிகள் செல்கின்றன.

குடிப்படைகள் என்று சொல்லப்படுகிற மக்களினது ஆயுதப் படைகள் குறித்தும் மிக விரிவாக ஜியாப் அவர்கள் கூறியுள்ளார்.

இன்று எங்கள் நிலையில் போராளிகளாக மக்கள் மாற வேண்டுமாயின்

மக்களை ஆயுதமயமாக்குதல் - சேனைகளில் இணைத்தல் என்ற அடிப்படையில் செயற்படவேண்டிய காலகட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் வியட்நாமின் அனுபவங்கள் எங்களுக்குப் பயன்படும்.

தமிழீழ மக்கள் - வியட்நாமிய மக்களினது சாதனைகளைப் பற்றி அறிவதும் முக்கியமானது.

அந்த வகையிலும் ஜியாப்பின் கருத்துகளைத் தொடர்ந்து வாசிக்கிறேன்.

"போரில் குடிப்படைகளும் தற்காப்புப் படைகளும் ஒரு பெரும் பாத்திரத்தை வகித்தன."

இந்தத் தற்காப்புப் படைகளும் குடிப்படைகளும்தான் தற்போது நாங்கள் அமைக்க விரும்புகிற மக்கள் படையணியின் வியட்நாம் மரபாக இருக்கிறது.

"கலப்பை ஒரு கையிலும் ரைபிள் ஒரு கையிலும் சுத்தியல் ஒரு கையிலும் துப்பாக்கி ஒரு கையிலும்"

என்ற இயக்கங்களில் இளைஞர்களும் முதியவர்களும் ஆடவரும் பெண்டிரும் கிராமங்களிலும் நகரங்களிலும் சமவெளிப் பகுதிகளிலும் மலைகளிலும் எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதிலும் செயல் நுட்பத்துடன் பங்குபற்றினர். அவர்கள் தாழ்வாகப் பறக்கும் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகளை கிராமப்புறங்களில் ஆங்காங்கே ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வலைப்பின்னல் போல் அமைத்தனர்:

குடிமக்களையும் உற்பத்தியையும் பாதுகாத்து எல்லா உயரங்களிலும் எல்லா திசைகளிலும் பறக்கின்ற எதிரியினது விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகள் அடங்கிய பின்னலமைப்பை உருவாக்குவதில் விமான எதிர்ப்புப் படையுடனும் விமானப் படையுடனும் நெருக்கமாக ஒத்துழைத்தனர்."

இவ்வாறாக விரிந்து செல்லும் வசனங்களுக்கூடாக இங்கே நாம் அறிய வேண்டியது - த்ற்போது இரண்டு கைகள் உள்ள எங்கள் மக்கள் - ஒரு கையில் தொழிலுக்கான கருவிகளையும் மறு கையில் ஆயுதத்தையும் ஏந்தவேண்டிய காலம் வந்துவிட்டது.

வியட்நாம் மக்களினது சாதனைகளை வாசித்தால் இன்றைக்கு நம்ப முடியாததாக இருக்கக்கூடும். இருந்தபோதும் சமாதான காலத்திற்கூடாக உருவாக்கப்பட்ட படை அரசியல் படை என்று சொல்லப்பட்டது.

அந்த அரசியல் படையை சமாதான காலத்திலிருந்து போர்க்காலத்திற்குத் தள்ளப்பட்டபோது - எங்கள் தமிழீழம் போல் தற்காப்புப் படை நிலையிலிருந்து போரி டும் படையாக மாற்றிய வளர்ச்சியையும் நாங்கள் பார்க்கிறோம்.

தமிழீழத்தில் நீண்டகாலமாக போர் மரபு இருந்தது. இடையில் மறக்கப்பட்டுவிட்டது. ஆனால் வியட்நாமில் பல நூற்றாண்டு காலமாக சீனாவுக்கு எதிராக - ஜப்பானுக்கு எதிராக - பிரான்ஸுக்கு எதிராக - அமெரிக்காவுக்கு எதிராக என்ற போர்ப் படையணி மரபு இங்கு இல்லாவிட்டாலும் கூட வியட்நாமிய அனுபவங்களை இங்கே நாம் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

நாங்கள் வியட்நாம் அனுபவத்திற்கூடாக - விடுதலை வலயங்கள் அல்லது புரட்சிகரத் தளங்கள் அமைக்கப்பட்டது போல் இன்று தமிழீழத்தில் வன்னி என்பது விடுதலை வலயமாக - புரட்சித் தளமாக - மையமாக இருப்பதால் எங்கள் மக்கள் இக்கருத்துகளை



உள்வாங்கிக் கொள்ளவேண்டும்.

ஜியாப் சொன்னது போல் அவர் புரட்சி என்கிறார். நாம் விடுதலை என்று சொல்லலாம்.

"விடுதலையின் அனைத்துக் கடமைகளிலும் மக்களே அதற்குத் திடமான அடிப்படையாக அமைகிறார்கள் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. மக்களின் அரசியல் படைகளே ஆயுதப் படைகளின் திடமான தளமாகும். மக்களின் ஆயுதப் படைகளே புரட்சி சேனையின் திடமான அடிப்படைத் தளமாகும்." என்கிற செய்திக்கூடாக நாம் இங்கே ஒரு கட்டுமானத்தைக் கட்டவேண்டியது அவசியமாகிறது.

ஏற்கனவே எங்கள் விடுதலை அணியில் நிரந்தரப் படை அணியும் அதற்கு துணையான அணியும் கட்டப்பட்டுள்ளது.

### மூன்றாம் படையணி

இப்போது மூன்றாம் படையணி ஒன்றை அற்புதமாக - நேர்த்தியாக - கட்ட வேண்டிய நிலையில் உள்ளோம்.

அந்த வகையில் மக்களை போர் உத்திகளுக்கூடாக போரணியாக்கி போர் உத்திகளை மக்களுக்கும் கற்க வைத்து ஒரு மகத்தான அரசியல் படையையும் வலிமை மிக்க ஆயுதப் படையையும் ஒன்றிணைக்க வேண்டிய கால கட்டத்தில் நாங்கள் வாழ்கிறோம்.

இதைத்தான் மஹிந்தரின் இராணுவ உத்திகளும் குண்டுவீச்சுகளும் சர்வதேச அழுத்தங்களும் உருவாக்கி உள்ளன.

தொடர்ந்து வரக்கூடிய இந்த மிகப்பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிற மிகப் பெரிய கவசமாக - அற்புதமான ஒரு படையாற்றலாக - மக்கள் படையணியை எங்கள் தேசத்திற்கேற்ற வகையில் உருவாக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஆயத்தமாக வேண்டும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திராவில் சோகம்



கொலைச் செய்திகேட்டு கலங்கும் உறவுகள்...

ஆப்கானிஸ்தானில் இந்தியப் பெறியியலாளர் சூரியநாராயணாவை (வயது-41) தலிபான் பயங்கரவாதிகள் காட்மிராண்டித்தனமாகக் கழுத்தை அறுத்துப் படுகொலை செய்த தகவல் அறிந்ததும் ஹைதராபாத்தில் உள்ள அவரது குடும்பம் மட்டுமல்லாமல், ஆந்திர மாநிலமே சோகத்தில் மூழ்கியது.

ஆப்கானிஸ்தானில் பணியில் இருந்தபோது வெள்ளிக்கிழமை அவர் கடத்திச் செல்லப்பட்டார். அவரை எப்படியாவது மீட்டுத் தாருங்கள் என்று அவரது தந்தை சந்திரசேகர் உருக்கமாக கோரிக்கை விடுத்திருந்தார். பேச்சுவார்த்தை நடத்தி மீட்டுவர இந்திய அரசு அதிகாரிகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பிவைத்தது. ஆனால், கெடு நேரம் முடிவதற்கு முன்னதாகவே சூரியநாராயணாவை தலிபான்கள் கொடூரமாகக் கொன்றுவிட்டனர்.

ஏற்கெனவே அழுதுகொண்டு இருந்த சூரியநாராயணாவின் மனைவி, மஞ்சுகளாவிடம் அத்தகவலைத் தெரிவித்தவுடன் அவர் மயங்கி விழுந்தார். அவரது குழந்தைகள் தாங்க முடியாத துயரத்துடன் கதறி அழுதனர். சூரியநாராயணாவின் தாயார் அனந்தலட்சுமி சில மாதங்களாகவே உடல் நலமின்றிப் படுக்கையில் இருக்கிறார். அத்தகவலைக் கேட்டு, அவரது மனநிலை பாதிக்கப்பட்டுவிட்டது. 'கடவுள் அவர்களைத் தண்டிப்பார்' என்றார் அவர். (ஐ-202)

# இந்தியப் பொறியியலாளருக்கு இழப்பீட்டுத்தொகை

புதுடில்லி,மே 2

ஆப்கானிஸ்தானில் பணியாற்றியபோது தலிபான் தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட இந்தியப் பொறியியலாளர் சூரிய நாராயணாவின் குடும்பத்துக்கு 20 லட்சம் இந்திய ரூபா இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் என்று அவர் பணியாற்றிய பஹ்ரைனை சேர்ந்த அல்- மோய்யத் நிறுவனம் அறிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் வாழும் சகோதர சகோதரிகளுக்கு சிறந்த வாழ்க்கையை அமைத்துத்தரவேண்டும் என்று உறுதியுடன் பணியாற்றி தனது உயிரை ஈந்த தியாகி அவர். மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமாகக் கொலை செய்த இத்துயரச் சூழலில் நாங்கள் பேச்சற்று நிற்கிறோம். அக்கொடூரச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்று அவர் பணியாற்றிய நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

உலக அரங்கில்

# காஷ்மீர் இந்து கிராமவாசிகள் 22 பேர் சுட்டுப் படுகொலை!

## இஸ்லாமிய தீவிரவாதிகள் கைவரிசை

புதுடில்லி,மே.2

இந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட காஷ் மீர் உள்ளூர்க் கிராமமொன்றுக்குள் ஊடுருவித் தாக்கிய இஸ்லாமிய தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் 22 இந்துக் களை கொலை செய்தும் 5 பேரைக் காயப் படுத்தியுமுள்ளனர் என்று காஷ்மீர் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

தோடா மாவட்டத்தைச் சேர்ந்த இந்துக்களான இம்மக்களை தீவிரவாதிகள் அவர்களின் வீடுகளுக்கு முன்னர் வரிசையாக நிறுத்தி வைத்து சுட்டுக்கொன்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் 2003 ஆம் ஆண்டு போர்நிறுத்தம் ஏற்பட்டதன் பின்னர் இடம்பெற்றுள்ள மிக மோசமான சம்பவம் இதுவென்று கூறப்படுகின்றது.

ஜம்மு காஷ்மீருக்கு சுமார் 170 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிராமத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ள தாகப் பொலீஸ் அதிபர் கூறினார்.

காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கும் நிலையில் இந்தக் கொடூர சம்பவம் நிகழ்ந்துள்ளது. (ப)

# இங்கிலாந்தில் இரண்டு பண்ணையில் பறவைக் காய்ச்சல் பரவியது உறுதி

லண்டன்,மே2

இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியில் உள்ள இரண்டு கோழிப்பண்ணைகளை சேர்ந்த கோழிகள் பறவைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன என்பது சோதனையின் மூலம் தெரியவந்துள்ளது.

இங்கிலாந்தில் உள்ள ஸ்கொட்லாந்து பகுதியில் கடந்த மாதம் ஓர் அன்னப்பறவை பறவைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு இருந்தது தெரியவந்தது.

இங்கிலாந்தின் கிழக்கு பகுதியில் உள்ள நோர்போல்க் கவுண்டி பகுதி கோழிப் பண்ணைகளுக்குப் பெயர் போனது. இங்குள்ள கோழிப்பண்ணைகளைச் சேர்ந்த கோழிகள் பறவைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன என்பது கடந்த வாரம் தெரியவந்தது. இதையடுத்து, 30 ஆயிரம் கோழிகள் அழிக்கப்பட்டன. தொடர்ந்து மேலும் இரண்டு கோழிப்பண்ணைகளை சேர்ந்த கோழிகளும் பறவைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன என்பது சமீபத்திய சோதனையின் மூலம் தெரியவந்துள்ளது. இதை இங்கிலாந்து சுற்றுச்சூழல் அமைச்சகச் செய்தித் தொடர்பாளரும் உறுதி செய்துள்ளார்.

இங்கிலாந்தில் இருந்து கோழிகளை இறக்குமதி செய்ய ஜப்பான் தடை விதித்துள்ளது. இதுகுறித்து அந்தச் செய்தி தொடர்பாளரிடம் கேட்டபோது, ஜப்பானின் இந்த முடிவு குறித்து அதிகாரபூர்வமான தகவல்கள் ஏதும் வரவில்லை. தொடர்ந்து அந்நாட்டு அரசிடம் பேசி வருகிறோம் - என்றார். (ஐ-202)(22)

# டார்பெர் பிரச்சினைத் தீர்வுக்கு மேலும் 48 மணிநேர அவகாசம்

சூடானில் டார்பெர் பிரதேசத்தில் போரில் ஈடுபட்டுள்ள தரப்புகள் அமைதித் தீர்வொன்றை உருவாக்கிக் கொள்வதற்கென மேற்கொண்டும் 48 மணி நேரம் வழங்கப்பட்டுள்ளது.

நைஜீரிய தலைநகர் அபுஜாவில் நடைபெற்றுவரும் டார்பெர் தொடர்பான அமைதிப் பேச்சுக்களின் மத்தியஸ்தராக செயற்பட்டுவரும் ஆபிரிக்க யூனியன் பிரமுகர்கள் பேச்சுவார்த்தைக்கான காலஅவகாசம் முடிவுற்ற போதிலும் அதனை மேற்கொண்டும் நீடிப்பதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க யூனியன் அனுசரணையுடனான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு சூடானிய அரச அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் போராளி குழுக்களுக்கிடையில் பொதுக் கருத்து ஏற்படவில்லை.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள உடன்பாட்டின் இப்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ள இரண்டு போராளிக் குழுக்கள் மறுத்துள்ளன. ஆனால் பிரதான போராளிகள் குழு உடன்பாடு காட்டப்படுவதை எதிர்க்கவில்லை.

இரு தரப்பு பேச்சாளர்களையும் சந்தித்து ஆலோசித்ததன் பின்னர் ஆபிரிக்க யூனியன் அனுசரணையாளர் சாவிம் அகமது சாலிம் கருத்து தெரிவித்த போது, மேற்கொண்டும் ஆலோசனைகளை நடத்த உதவும் வகையில் 48 மணிநேரம் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறி னார்.

தரப்புக்கள் தங்களுக்கு இடையான தீர்க்கப்படாதிருந்துவரும் பிரச்சினைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஒரு யோசனையின் பேரில் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது உருவாக்கப்பட்டுவரும் அமைதித் தீர்வின் பிரகாரம் அரசாங்க சார்பு போராளிக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். புரட்சி போராளிகள் சூடானிய ராணுவத்துடன் இணைத்துக் கொள்ளப்படவேண்டும். சூடானிய அரசினால் நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த டார்பெர் பிரதேசத்துக்கு விடிவு ஏற்படவேண்டும் என்று போராளிகள் கூறுகின்றார்கள். (ப)(39)

# பிலிப்பைன்ஸில் மேதின பேரணி தடுக்கப்பட்டது

மேதினமான நேற்று பிலிப்பைன்சின் தலைநகரான மணிலாவில் ஜனாதிபதி மாளிகையை நோக்கி நடத்தப்படவிருந்த தொழிலாளர் பேரணி பொலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது.

சுமார் நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கெதிரான கோஷங்களை எழுப்பியபடி ஜனாதிபதி மாளிகையை நோக்கிச் செல்வார்கள் என பொலீஸாரால் எதிர்பார்க்கப்பட்டது. பொலீஸாரால் பேரணி தடுக்கப்பட்டலால் பொதுமக்கள் பெரும் விசனமடைந்தனர். (202)(22)

# சீனாவில் நிலக்கரிச் சுரங்க விபத்து

சீனாவில் வடமேற்கு பகுதியில் உள்ள ஒரு நிலக்கரி சுரங்கத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடி விபத்தில் 24 பேர் இறந்தனர். எட்டு பேரைக் காணவில்லை.

இது குறித்து சீனாவின் அதிகாரப்பூர்வ செய்தி ஏஜென்சியான ஜின்ஹூவா வெளியிட்ட தகவல் வருமாறு:-

சீனாவில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான நிலக்கரி சுரங்கங்களில் விபத்துக்கள் ஏற்பட்டு ஏராளமானோர் இறந்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு 3 ஆயிரத்து 300 நிலக்கரி சுரங்க விபத்துக்கள் மற்றும் வெள்ள நிகழ்வுகள் ஏற்பட்டு 6 ஆயிரம் பேர் இறந்துள்ளனர்.

சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஷான்ஷி மாகாணத்தில் வயாவ்போவ் நிலக்கரி சுரங்கம் உள்ளது. இதில் திடீரென ஏற்பட்ட வெடிவிபத்தில் 24 பேர் இறந்துவிட்டனர். எட்டு பேரைக் காணவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் அந்த நிலக்கரி சுரங்கத்தில் பணிபுரிபவர்கள். - இவ்வாறு தகவல் வெளியாகியுள்ளது.

# நைஜீரிய எண்ணெய் உற்பத்தி 20 வீதம் வீழ்ச்சி

லாகோஸ் மே2

நைஜீரியாவின் போராளிகள் நடத்தியுள்ள குண்டுத் தாக்குதல்களின் காரணமாக அந்நாட்டின் எண்ணெய் உற்பத்தி 20 வீதத்தால் குறைந்துள்ளது.

நைஜீரிய குடாப் பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள பகுதியில் கார் குண்டு தாக்குதல் ஒன்று நடைபெற்றதாகச் செய்திகள் கூறின.

துறைமுக நகரான வாரி என்ற இடத்தில் நடந்த கார்க்குண்டு தாக்குதலில் எவரும் காயமடைந்ததாகத் தெரியவில்லை. ஆனால் பல கார்கள் சேதமுற்றுள்ளன. (ப)

# 2011 இல் உலகக் கிண்ண கிரிக்கெட் நடத்தும் வாய்ப்பை ஆசியா பெற்றது

டுபாய்,மே2

உலகக் கிண்ணத் தொடரை நடத்தும் அரிய வாய்ப்பை ஆசிய நாடுகள் பெற்றன. ஆசியாவுக்கு ஆதரவாக 10 வாக்குகள் கிடைத்தன. 2011இல் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷில் உலக கிண்ணப் போட்டிகள் நடக்க உள்ளன. 3 வாக்குகள் மட்டுமே பெற்ற ஆஸ்திரேலியா, நியூசிலாந்து வாய்ப்பைப் பறிகொடுத்தன.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில்(ஐ.சி.சி.,) சார்பில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடக்கின்றது. அடுத்த போட்டி எதிர் வரும் 2007இல் மேற்கிந்தியத்தீவில் நடக்க உள்ளது. இதற்கு பிறகு 2011இல் போட்டியை நடத்த ஆசியா, ஆஸ்திரேலியா இடையே கடும் போட்டி நிலவியது: இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நான்கு ஆசிய நாடுகள் சேர்ந்து போட்டியை நடத்த விருப்பம் தெரிவித்தன. இதற்காக முறைப்படி உரிமை கோரி விண்ணப்பித்தன. இதேபோல் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து இணைந்து உரிமை கோர பரபரப்பான சூழ்நிலையில் போட்டியை நடத்தும் நாட்டை வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்க ஐ.சி.சி., செயற்குழு டுபாயில் கூடியது. இந்தியா சார்பில் முன்னாள் கிரிக்கெட் சபைத் தலைவர் இந்தர்ஜித் சிங் பிந்த்ரா கலந்து கொண்டார். வாக்கெடுப்பில் இந்தியா, பாகிஸ்தான் உட்பட 10 நாடுகள் மற்றும் ஐ.சி.சி. இணை உறுப்பு நாடுகளான இஸ்ரேல், மலேஷியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய 13 நாடுகள் கலந்து கொள்ள தகுதி வாய்ந்தவை. இதில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற 10 நாடுகளின் 7 உறுப்பினர்களின் ஆதரவு பெறும் நாட்டுக்கே போட்டியை நடத்தும் உரிமை அளிக்கப்படும். கோடிக்கணக்கான ரசிகர்கள், மற்றும் ஐ.சி.சி.,க்கு அதிக வருமானம் தருவது ஆகியவை ஆசிய நாடுகளுக்கு வலு சேர்த்தது. ஒலிம்பிக் உள்ளிட்ட மெகா போட்டிகளை நடத்திய அனுபவம் ஆஸ்திரேலியாவுக்கு சாதகமாக இருந்தது. இப்படி இரு பிரிவும் வலிமையாக இருந்ததால் வாக்கெடுப்பில் இழுபறி ஏற்படும் என கூறப்பட்டது.

ஆனால், வாக்கெடுப்பில் ஆசிய நாடுகளுக்கு அமோக ஆதரவு காணப்பட் டது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் உறுப்பினர்களின் நான்கு வாக்குகள் உறுதியாக இருந்தன. இதைத் தவிர்த்து மேலும் 6 உறுப்பினர்கள் ஆதரவு அளிக்க, ஆசிய நாடு கள் 2011 உலகக் கோப்பை போட்டியை நடத்துவதற்கான உரிமையை மிக எளிதாக பெற்றன. பெரும்பான்மைக்கு 7 வாக்குகள் தான் தேவை. ஆனால் ஆசிய நாடுகள் 10 வாக்குகள் பெற்றது சிறப்பம்சம். வெறும் 3 வாக்குகள் பெற்ற ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து வாய்ப்பை இழந்தன.

இது பற்றி சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் ஈசான் மானி கூறுகையில்-

2011இல் ஆசிய நாடுகள் உலக கிண்ணப் போட்டியை நடத்துவதற்கான உரிமை பெற்றுள்ளன. 2015இல் ஆஸ்திரேலியாவும் 2019இல் இங்கிலாந்தும் போட்டியை நடத்துவது என்று ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் எவ்வித பிரச்சினையுமின்றி சுமூகமாக நடந்தது.- என்றார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசியாவுக்கு திரும்புகிறது. இந்தியத் துணை கண்டத்தில் கடைசியாக 1996இல் போட்டிகள் நடந்தன. தற்போது 2011இல் போட்டியை நடத்தும் வாய்ப்பை ஆசியா பெற்றுள்ளது. 1975இல் தொடங்கிய உலகக்கிண்ணப் போட்டி நான்கு முறை இங்கிலாந்தில்(1975, 1979, 1983, 1999) நடந்துள்ளன. 1987இல் இந்தியா, பாகிஸ்தானில் நடந்தது. 1992இல் ஆஸ்திரேலியா, நியூ சிலாந்து இணைந்து நடத்தின. 1996இல் இந்தியா, பாகிஸ்தான், இலங்கையில் நடந்தது. கடைசியாக 2003இல் தென் ஆபிரிக்காவில் உலகக் கிண்ணப் போட்டி நடந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி மாநாட்டின் கூட்டறிக்கையில் ஒப்பமிட மேலக மக்கள் முன்னணி மறுப்பு

## இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி கைச்சாத்து

கொழும்பு, மே2

கடந்த மாதம் வெள்ளிக்கிழமை 28ஆம் திகதி மாலை மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டின் முடிவில் வெளியிட்ட கூட்டறிக்கையில் மேலக மக்கள் முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கையெழுத்திட மறுத்துவிட்டன.

சமாதான முயற்சிகள் தொடர்பாகவும், இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் அரசு கொண்டிருக்கும் நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதாகவே அந்தக் கூட்டறிக்கை அமைந்துள்ளது எனவும் - அதனாலேயே அதில் கையெழுத்திட தாங்கள் மறுத்துவிட்டனர் எனவும் - இவ்விரு கட்சிகளும் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இம்மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய சிறுபான்மைக் கட்சிகள் இந்தக் கூட்டறிக்கையை ஏற்றுக் கையெழுத்திட்டுள்ளன.

இப்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற வன்முறைகள் முற்றாக நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதற்காகவே சிறுசிறு பிழைகளைப் பெரிதுபடுத்தாமல் தாம் இந்தக் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டார்கள் என்று இ தொ.கா. மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியன நியாயம் கூறுகின்றன.

இவ்விவகாரம் தொடர்பாக மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்திருப்பதாவது :-

'சர்வகட்சி மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை அரசின் செயற்பாட்டை நியாயப்படுத்துவதாகவே உள்ளது. அந்த அறிக்கையில் இராணுவத் தளபதி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால், வடக்கு - கிழக்கில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், கொழும்பில் தமிழர்கள் கைது, அவிசாவளைப் பகுதியில் தலையில்லா முண்டங்கள் மீட்கப்பட்டுள்ளமை போன்றவை எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை.

''இராணுவத் தளபதி மீதான தாக்குதலே அந்த அறிக்கையில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர்கள் மீதான தாக்குதல்கள் பற்றிப்பேசாது இராணுவத் தளபதி மீதான தாக்குதல் பற்றிப் பேசுவதற்காகவே சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது என்பதை அக்கூட்டறிக்கை எடுத்துக்காட்டுகிறது''.

''இராணுவத் தளபதிமீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதே வேளை, தமிழர்கள் மீதான தாக்குதல் பற்றியும் பேசப்படவேண்டும். அப்பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவேண்டும் என்றே நாம் அரசைக் கேட்கிறோம். ஆகவேதான் இந்தக் கூட்டறிக்கைக்கு நாம் இணங்கமுடியாது என்ற நிலையில் அதில் நாம் கையெழுத்திடவில்லை என்றார்.

இ.தொ.காவின் பிரதித் தலைவர் ஆர். யோகராஜா இவ்விடயம் குறித்து கூறியதாவது -

தற்போது இடம்பெற்று வருகின்ற வன்முறை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு சமாதானம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது ஒரே நோக்கு. அதற்காக நாம் நெகிழ்வுத்தன்மையுடன் செயற்பட வேண்டியது அவசியம்.

''கூட்டறிக்கையில் அது குறிப்பிடப்படவில்லை, இது குறிப்பிடப்படவில்லை எனக் கூறிக்கொண்டு சிறுசிறு பிழைகளைப் பெரிதுபடுத்தினால் நிச்சயம் சமாதான முயற்சிக்கு நாம் உதவ முடியாது.

''சில தவறுகள் இடம்பெற்றிருந்தால் சமாதானம் மலரவேண்டும் என்பதற்காக அவற்றைச் சகித்துத்தான் ஆகவேண்டும். அந்த வகையில்தான் நாம் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டோம்.

''நாம் அறிந்த வகையில் கையெழுத்திடக்கூடாத அளவிற்கு அக்கூட்டறிக்கையில் தவறுகள் ஏதும் இடம்பெற்றிருக்கவில்லை. சிலரின் பார்வையில் அவ்வாறு தவறுகள் இருந்தாலும் நாட்டின் நலன்கருதி அதைப் பெரிதுபடுத்தக்கூடாது'' - என்றார்.

இக்கூட்டறிக்கையில் கையெழுத்திட்ட மலையக மக்கள் முன்னணியும் இதே கருத்தையே தெரிவித்துள்ளது.

(க)

# போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை ஏற்றுக்கொள்ள முடியாது

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

கொழும்பு, மே2

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அது முற்றிலும் முரணானது எனவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதனைத் தாம் உயர்மட்டப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள இருப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை, சம்பூர் பகுதிகளில் இலங்கை வான்படையினர் உட்பட முப்படையினரும் இணைந்து நடத்திய தாக்குதல் சம்பவமானது போர்நிறுத்த உடன்பாட்டை வெளிப்படையாக மீறும் செயல் எனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்திருந்தது. இதனையே அமைச்சர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக அரசு இதுவரை எந்த வித உத்தியோகபூர்வத் தகவல் எதனையும் வெளியிடவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் சமாதான செயலருக்கும் இடையில் பேச்சு ஒன்று இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சந்திப்பில் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை தொடர்பாக விவாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(க)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடத்தப்பட்ட இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வில் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் பயனாளி ஒருவருக்கு மூக்குக்கண்ணாடி அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட 'பார்வைக்கு முதலிடம்' பிரிவுத் தலைவர் லயன் கா.சற்குணதேவன், சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)

# அமெரிக்காவில் படகு விபத்து! யாழ்.சிறுவன் பலி!

யாழ்ப்பாணம்,மே2

அமெரிக்கா டெக்ஸாஸ் நகரில் நடைபெற்ற படகோட்டப் போட்டியில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த நற்குணசேகரம் ஹரி (வயது 15) என்ற மாணவரே உயிரிழந்தவராவார்.

இவரது பெற்றோர் மானிப்பாயிலிருந்து புலம்பெயர்ந்து கனடா சென்று அங்கிருந்து அமெரிக்கா சென்று வசித்து வருகின்றனர்.

தனது பாடசாலை சார்பில் மாணவர்கள் பங்கேற்கும் தொண்டர் அமைப்பொன்றின் குழு நிகழ்வில் பங்கேற்க இவர் சென்றிருந்தார் என்றும் - அங்கு இடம்பெற்ற படகுப் போட்டியில் பங்கேற்ற இவர் விபத்தில் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-204)

# அக்குறணை பிரதேசசபைத் தேர்தல் வாக்குகளைப் பாதுகாக்க உத்தரவு

## உயர் நீதிமன்றம் பிறப்பிப்பு

கொழும்பு,மே2

அக்குறணைப் பிரதேசசபைத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் குக் கிடைத்த வாக்குகளைப் பாதுகாப்பாக வைக்குமாறு உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது அக்குறணைப் பிரதேச சபைத் தேர்தலில் கிடைத்த வாக்குகளில் மோசடி இடம்பெற்றுள்ளதாகக் கூறி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 18 உறுப்பினர்கள் தாக்கல்செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட பின்னரே உயர்நீதி மன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

மனுவை ஆராய்ந்த உயர்நீதிமன்ற நீதியரசர்களான நிமல் திஸநாயக்க, நிஹால் ஜயசிங்க, நிஸ்ஸங்க உதலாகம ஆகியோர் விசாரணைக்கு அனுமதித்தனர். மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஆஜரானார். மனுமீதான விசாரணை ஜூலை 13ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

(க)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் செல்லையா



*(முன்னாள் வர்த்தகர்)*

இல.85, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்லையா அவர்கள் 30.04.2006 ஞாயிற்றுக்கிழமை சிவப்பேறடைந்தார்.

அன்னார் அமரர்களான பொன்னம்பலம்-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் கனகவல்லியம்மாவின் பாசமிகு கணவரும் அமரர்களான வேலாயுதம் - முத்தம்மா தம்பதியரின் மருமகனும் நற்குணதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை - நல்லூர் சாதனா பாடசாலை), திருச்செல்வம் (இந்தியா), மனோகரராஜா (கனடா), சிவகுமார் (டென்மார்க்), தனராணி (யாழ்.போதனா வைத்தியசாலை), ஜெகநாதன் (யாழ்.ப.நோ.கூ.சங்கம்), ஜெயராணி (கனடா), அரசரத்தினம் (கனடா), செல்வராணி (ஆசிரியர், நல்லூர் சாதனா பாடசாலை), கலைச்செல்வன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்நாயகம் (நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), ராஜேஸ்வரி (இந்தியா), பாலபரமேஸ்வரி (கனடா), சிலோசனா (டென்மார்க்), அமிர்தலிங்கம் (இ.போ.ச., கோண்டாவில்), ஜெயராணி, இராமலிங்கம் (கனடா), கலைச்செல்வி (கனடா), இரட்ணசிங்கம் (ஆசிரிய ஆலோசகர்), தவச்செல்வி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் Dr.சுதர்சினி, Dr.முகுந்தன், ரமேஸ், திருத்தணிகா, சிவாஜினி, குகநேசன், அருள்குமரன், துசாந்த், கிரிசாந், நிரோசாந், நிருபன், கீர்த்தனா, மயூரன், பிரணவன், செந்தூரன், அபிநயன், சுபாங்கி, விதூசன், சிந்துஜா, பிரவீணா ஆகியோரின் அன்புப் பேரனும் மிதுசாளினி, நிசாளினி, அட்சரன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2006) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 4.30 மணிக்கு செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*87, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர் சந்தை,*
*யாழ்ப்பாணம்.* (49970)(32-17-15)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### பெரியதம்பி அருட்பிரதாசன்



*(முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்)*

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த பெரியதம்பி அருட்பிரதாசன் நேற்று (01.05.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ராதாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் மேகலா, தர்சினி (ஆசிரியை, நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தும்பளை,*
*பருத்தித்துறை.* (சி/49171)(32-15-17)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### முத்தையா தணிகாசலம்



வட்டு.கிழக்கு, கந்தசாமி கோயிலடி (மாவடி), வட்டுக்கோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும் இல. 1019, திருநகர், கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முத்தையா தணிகாசலம் அவர்கள் 30.04.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, திருநகர் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
**த.ஸ்ரீபாலன்**(மகன்)
(பொன்னம்பலம் மருத்துவமனை உத்தியோகத்தர்).

(சி/49172)(22-32-15-17)

## கலைஞர்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இசைக்குழுவிற்கு தபேலா, பேஸ் கிற்றார், லீட் கிற்றார், ஒக்தபாட், ஒகன் (உதவி ஒகன்) ஆகிய வாத்தியக் கலைஞர்கள் தேவை. மற்றும் பாடகிகளும் தேவை.

தகைமைகளுடன் கீழ்க்காணும் முகவரிக்கு தினமும் பி.ப. 3.30 - 6.30 மணிவரை நேரில் வரவும்.

இலைமறைகாயாய் உள்ள கலைஞர்களுக்கு இது ஓர் அரிய வரப்பிரசாதம்.

**விண்ணப்பமுடிவுதிகதி: 11.05.2006**

சிறிக்குமரன் இசைமன்றம்,
[illegible]
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொலைபேசி: 077 6531169


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 83 தமிழர்கள் சிலாபத்தில் கைது

சிலாபம் பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதலின்போது பொலீஸார் 83 தமிழரைக் கைது செய்தனர்.

இந்தத் தேடுதலின்போது 300-இற்கும் மேற்பட்ட பொலிஸார், தமிழர்களிடம் துருவித் துருவித் விசாரணைகளை நடத்தியிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பெண்களும் அடங்குவர். கைது செய்யப்பட்ட அனைவரும் திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களிடம் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய போதியளவு ஆவணங்கள் இல்லை என்று கூறும் சிலாபம் பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

# போக்குவரத்துச் சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுத் திரும்பி வரும் போதே இந்தச் சம்பவம் நடந்தது என்று காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.

"அடையாள அட்டையைக் கடற்படை யினர் பார்த்த பின்னர் தான் என்னை சப்பாத்துக் கால்களால் கடுமையாகத் தாக்கினர்." - என்றார் நடத்துநர்.

"ஊர்காவற்றுறையில் மக்களை இறக்கிவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது வீதியால் வந்தவர்கள் யாழ்ப்பாணம் போக முடியாது என்று சொன்னார்கள். இதனால் அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ மதகுரு ஒருவரின் உதவியுடன் வீதிக் கரையோரமாக பஸ்ஸை நிறுத்திவிட்டுக் காத்திருந்தோம்.

"அந்த இடத்திற்கு வந்த படையினர் எம்மிடம் விசாரணை நடத்தினர். சாரதி சிங்களத்தில் அவர்களுடன் உரையாடினார். பின்னர் என்னிடம் அடையாள அட்டை கேட்டனர். நான் காட்டினேன். பார்த்தவுடன் காலால் உதைத்தனர். நான் கீழே விழுந்தவுடன் துப்பாக்கிப் பிடியாலும் இடித்தனர்." - இவ்வாறு அவர் தனக்கு நிகழ்ந்த சம்பவத்தை விவரித்தார் பிரபாகரன்.

இதற்குக் கண்டனம் தெரிவித்தே போக்குவரத்துச் சபை சாரதிகளும் நடத்துநர்களும் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் காலையில் இருந்து பஸ் சேவைகள் ஏதுமின்றி மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். வழமைக்கு அதிகமான மக்களை ஏற்றமுடியாமல் தனியார் பஸ்கள் சிக்கல்களை எதிர்கொண்டன.

இந்தப் பிரச்சினை குறித்து யாழ். அரச அதிபருடன் பேசித் தீர்வு காண்பார் என போக்குவரத்துச் சபை வட பிராந்திய முகாமையாளர் உறுதிமொழி அளித்த பின்னர், பிற்பகலில் பணியாளர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்பினர். அதன் பின்னர் சேவைகளும் வழமைக்குத் திரும்பின.

(எ-சு-14-15-86-190)


**PERSONAL, GROUP CLASSES FOR 2008**

PHYSICS - T.A. PAGAN B.Sc.

COM. MATHS- G.G. PARTHEEPAN B.Sc.

ஆரம்பம்: 06.05.2006

**மாதுரி கல்வி நிலையம்**

நாவலடி ஒழுங்கை,
(ஒளி அழகன் ஸ்ரூடியோ அருகில்)
ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.

**A/L 2008**

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

B.st. - Mr.பசில்
Acc. -Mr.தவா
Econ. - Mr.கஜீதரன்
Eng.- Mr.Ramanan
Chris. - Mrs.A.மல்லிகா
Tamil - Mr.சிவா
Log. - Mr.இரா. ரமணன்
Hindu. Drama. - Mr.மயூரன்
Geo.- ஆசிரியர்

SHAMROCK

**பிரத்தியேக வகுப்புக்கள்** ஆரம்பம்
03.05.2006 மாலை 04மணி
**புவியியல் A/L 2008**
ஆசிரியர்:
N.S.சங்கர் B.A.(Hons)Geog
மயிலணி சிவன் கோவில் முன்
சுன்னாகம்.


# மரண அறிவித்தல்கள்

## இராசமணி சங்கரப்பிள்ளை

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசமணி சங்கரப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (30.04.2006) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும் செல்லம்மா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சரசு, திலகம், காலஞ்சென்ற காந்தி, சிறி, கிளி, காலஞ்சென்ற இந்திரா, கருணா ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகாலிங்கம், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம், அருள்நாயகி, வரதலிங்கம், தனபாலு, ஞானலிங்கம், யோகநாயகி, விமலதாஸன், சிவகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பகவதி, மகேஸ்வரி காலஞ்சென்ற புவனநாதன் மற்றும் சிவானந்தி, ரதி, சுகந்தி, முரளீஸ்வரன், ரூபி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல்10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ச.சிவகாந்தனி (மகன்).
077 9173911

*முதலாம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.*
(49976) (25-18-34-49)

## தம்பர் சரவணமுத்து

**(ஓய்வுபெற்ற அதிபர்)**

கரவெட்டி கிழக்கு, தல்லையப்புலத்தைச் சேர்ந்த தம்பர் சரவணமுத்து அவர்கள் நேற்று (01.05.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பர் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் ரவீந்திரன், வாமன் (நோர்வே), முரளிதரன் (லண்டன்), சாந்தகுமாரி, சகுந்தலாதேவி, நிர்மலாதேவி, சொர்ணமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் கணபதிப்பிள்ளை (அதிபர், யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்), துரைராஜா (ஜேர்மனி), வசந்தராஜன் (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராசா (சுவிஸ்), செல்லம்மா, அன்னலட்சுமி, சுவாஜினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வ.கணபதிப்பிள்ளை (மருமகன்)
(அதிபர், யா/ யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்).

*தல்லையப்புலம்,*
*கட்டைவேலி,*
*கரவெட்டி கிழக்கு.*
(சி-49176) (25-18-34-49)

# உலகப் பாட்டாளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் ஏ-9 வீதி வழியே பேரணியாகச் சென்றார்கள். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் ஊடகச் செயலாளர் விமல் வீரவன்ஸ, ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் ஆகியோரது கொடும்பாவிகளும் பேரணியில் இழுத்து வரப்பட்டன.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம் வரை சென்ற பேரணி அங்கு இடம்பெற்ற பொதுக் கூட்டத்துடன் முடிவடைந்தது. மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இராமச்சந்திரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. பொதுச்சுடரினை வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா ஏற்றி வைத்தார். தொடர்ந்து பொதுக் கூட்டம் இடம் பெற்றது. பல பிரமுகர்களும் உரையாற்றினர். பின்னர் மேதின அறைகூவல் வாசிக்கப்பட்டது.

இறுதியில், இழுத்து வரப்பட்ட தெற்கு அரசியல்வாதிகளின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

"இலங்கைத் தீவில் சிங்கள ஏகாதிபத்திய அரசியலாளர்களால் தமிழ்பேசும் மக்களின் வாழ்வுரிமைகள் முற்றாகப் பறிக்கப்பட்டுள்ளன. சர்வதேச சமூகம் முன்பாகவே நாளாந்தம் உயிர்ப் பாதுகாப்புக்காக ஏங்கித் தவித்து வாழும் தமிழ்பேசும் மக்கள், உலக சமூகத்தோடு ஒட்டி உலக பாட்டாளி நாளை எவ்வாறு மகிழ்வுடன் கொண்டாட முடியும்?" என்று மேநாள் அறைகூவலில் கேட்கப்பட்டுள்ளது.

(எ-க-405)


**ராஜா** யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
**அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது**
10.30,2.30,6.30,9.30 ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்றுமுதல் எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா மற்றும் பலர் நடித்த
**கள்வனின் காதலி**
காட்சி நேரம்: 10.30, 2.30, 5.30,

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்
பிரவு, நவ்யாநாயர், முரளி, வடிவேலு நடித்த
**பாசக்கிளிகள்**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

**BARATHY**
**சித்தன்கேணி**

O/L பரீட்சையில் அதிஉயர் பெறுபேறுகளைப்பெற்ற அனைத்து மாணவர்களையும் வாழ்த்தி இதேபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட

**O/L DAY CLASS**

புதிய பிரிவு ஆரம்பம்:
03.05.2006 புதன் காலை 8 a.m.
எமது தனித்துவமும் அதி திறமை கொண்ட ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம் திரு.தேவா | கணிதம் திரு.எஸ். சிவரூபன் |
| தமிழ் திரு. குகபரன் திரு. தமிழ்மாறன் | ஆங்கிம் திரு. இராஜகுலசூரியர் திரு.விஜயபாஸ்கர் |
| சமூகக்கல்வி திரு.சுதன் ,திரு. சந்திரன் | சமயம் திரு.தரன் |
| சுகாதாரம் திரு. குமணன் | வர்த்தகம் திரு. லோகேஸ்வரன் |

(சி-49174) (18-34-49)

குறிப்பு:சென்ற ஆண்டு போல் இம்முறையும் 90 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

**BARATHY**
**சித்தன்கேணி**

நீண்ட காலமாக சித்தன்கேணியில் கலை, வர்த்தகத் துறைக்கு அதிசிறந்த நிறுவனமும் மிகத் திறமைமிக்க ஆசிரியர்களும் எங்கு உண்டு என்பதை அறிந்தீர்களா

**A/L 2008**

கலை, வர்த்தக பிரிவுகள்
புதிய பிரிவு ஆரம்பம்:
03.05.2006 புதன் 3.30 p.m.
எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

- பொருளியல் - திரு. மகேந்திரன் - திரு. சுதாகரன்
- கணக்கீடு - திரு. முகுந்தன்
- வணிகக்கல்வி - திரு. பசில்
- அளவையியல் - திரு.R.P.சர்மா
- தமிழ் - திரு.பாலா
- இந்துநாகரிகம் - திரு. சுரேஸ்
- இந்துசமயம் - திரு. தரன்
- புவியியல் - திரு. குமரன்
- நாட. அரங்கு - திரு. சுதன்
- கிறிஸ்தவம் - திரு.வசந்தன்
- அரசியல் - திரு. சுகாஷ்
- ஆங்கிலம் - திரு. இராஜ குலசூரியர்

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(சி-49175) (18-34-49)

எமக்கு நிகர் வேறு எவரும் இல்லை
**பொருளியற் கல்லூரி**

*நாவலர் றோட், யாழ்ப்பாணம்.*
*கே.கே.எஸ்.றோட், இணுவில்.*
(இரு இடங்களிலும்)

**A/L 2008** கலை, வர்த்தகப் பிரிவுகள் சனி , ஞாயிறு மட்டும்

பிரிவு 2 ஆரம்பம்: 06.05.2006 சனி
எமது திறமைமிக்க ஆசிரியர் குழுவினால்.

| A/L 2008 | யாழ்.நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடக. அரங். | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | றஜீவன் | சுகாஷ் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| ஆங்கிலம் | இராஜகுலசூரியர் | இராஜகுலசூரியர் |

யாழ்.நகரில் - கலைப்பிரிவு -9.00 a.m. வர்த்தகப் பிரிவு - 8.00 a.m.
இணுவில் - கலைப்பிரிவு- 8.00 a.m.வர்த்தகப் பிரிவு - 2.00p.m.
குறிப்பு: உங்கள் அனுமதியினை 06.05.2006 அன்றைய தினம் இரு இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (49977) (25-18-34-49)


# மரண அறிவித்தல்கள்

## கனகரட்ணம் பரமசிவம் *(தொல்புரம்)*

வசாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் தொல்புரத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகரட்ணம் பரமசிவம் அவர்கள் நேற்று (01.05.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும் கனகாம்பிகையின் கணவரும் இந்திராதேவியின் (லண்டன்) தந்தையும் காலஞ்சென்ற கார்த்திகேசு தம்பதியரின் மருமகனும் தேவநாதனின் மாமனும் திரிசாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி.

*தொல்புரம், சுழிபுரம்.* (49977) (25-18-34-49)

## திருமதி பாலசிங்கம் செல்வநாயகி

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அல்பியன் தலவாக்கலையில் வசித்தவருமாகிய திருமதி பாலசிங்கம் செல்வநாயகி அவர்கள் 30.04.2006 அன்று கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய தம்பு- தங்கப்பிள்ளை தம்பதியரின் மகளும் பாலசிங்கத்தின் (முன்னாள் பிரதம எழுதுவினைஞர், அல்பியன் தலவாக்கலை) அன்பு மனைவியும் வசந்தாதேவி, பவளராணி (கனடா), சுகுமாரன் (ஜேர்மனி), மோகனசுந்தரி (சுவிஸ்), புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் கனகரெட்ணம் (ஆசிரிய ஆலோசகர், கல்விப் பணிமனை, கிளிநொச்சி), டாக்டர் செந்தில்நாதன் (கனடா), வசீகலா (ஜேர்மனி),கிருஸ்ணகுமார் (சுவிஸ்), வசீகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (கூட்டுறவுப் பரிசோதகர்), காலஞ்சென்ற பரமேஸ்வரி, ஆறுமுகம், இராசம்மா, கதிர்காமத்தம்பி (காசிப்பிள்ளை), கந்தசாமி (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அனித்தா (யாழ். மருத்துவபீடம்), கீத்தா (யாழ். விஞ்ஞானபீடம்), ஹணித்தா (யா/இந்து மகளிர் கல்லூரி), கிருத்திகன், தயாபரி(கனடா), நிஷாந்தன், நிரோஜன்(சுவிஸ்), மதினி, யாழினி,தனிஸ்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் இன்று(02.05.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
க.பாலசிங்கம் (கணவர்)
தொ.பே.: 021 4590176

*'கருணமாளிகை'*
*மணியகாரன் ஒழுங்கை ,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(49978) (18-34-49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலக பாட்டாளி தினத்தை புறக்கணித்து கிளிநொச்சியில் நேற்று நடந்த பேரணியில்...



திருமலையில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலின் காட்சிகள்...

## எல்லாளன்படை உரிமைகோரியது

கொழும்பு,மே2

வேலணையில் நேற்றுமுன்தினம் யுவதி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயப்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு தீவக எல்லாளன் படை உரிமைகோரியுள்ளது.

பலமுறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், அதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் தேசத்துரோக நடவடிக்கைகளிலும் சமூகச் சீரழிவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டமைக்காக இவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டதாக தீவக எல்லாளன் படை நேற்றிரவு ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதுமலை கொள்ளை முயற்சியின் போது

## பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டவர் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று மரணம்

வலி.வடக்கு, மே.2

சுதுமலை, சாவற்காட்டுப் பகுதியில் கொள்ளையில் ஈடுபட எத்தனித்தபோது பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட நபர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கடந்த ஞாயிறன்று நள்ளிரவு 6 பேர் அடங்கிய கும்பலொன்று வாள்கள், கத்திகள் என்பனவற்றுடன் வீடொன்றினுள் நுழைந்து ஜன்னல்கள், கதவை உடைத்து உட்புகுவதற்கு முயற்சித்தது.

அவ்வேளை, அங்கு திரண்ட மக்கள் கொள்ளையர்களை விரட்டி அடித்தனர். அப்போது அந்தக் கும்பலைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் நபர் ஒருவர் பொதுமக்களிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டு படுகாயமடைந்த அவர் கை, கால்கள், கயிற்றினால் பிணைக்கப்பட்டு குற்றுயிராக வீதியில் போடப்பட்டிருந்தார்.

மானிப்பாய் பொலீஸார் அவரை மீட்டெடுத்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். எனினும் அவர் சிகிச்சை பயனளிக்காததால் நேற்று அங்கு உயிரிழந்தார். (எ-13-86)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள், ஆசைப் பிள்ளை ஏற்றம் பகுதியில் 2 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்ட பின்னரே மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

தும்பளையில், நெல்லண்டை பிரதான வீதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் காலில் காயமடைந்தார். இந்தச் சம்பவத்தையடுத்து படையினர் நெல்லண்டைப் பகுதியில் தேடுதல் நடத்தினர்.

கிரனேட் வீச்சு, கிளைமோர் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களில் பொதுமக்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானார்கள் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை -யாழ்.கே.கே.எஸ் வீதியில் நாச்சிமார் கோயிலுக்கு சமீபமாக நேற்று மாலை 4.45 மணியளவில் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து படையினரும் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர் இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் எவரும் காயமடைந்ததாகத் தகவல் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. (எ-க-3-15-86-117)

## கருணா குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் புலிகளின் முன்னரங்க காவல் நிலைகளுக்கு புலிகளின் சிறப்பு அதிரடிப்படையினர் மீண்டனர் என்றும் கூறப்பட்டது.

கருணா குழுவினர் மீதான தாக்குதலின் போது அவர்களைக் காப்பாற்ற முயன்ற குருநாகல் கல்வத்தையைச் சேர்ந்த இராணுவக் கப்டன் லொய்ட் பெர்னாண்டோ மற்றும் சிப்பாய்களான உபுல், ஜயக்கொடி, திஸநாயக்க, அநுர ஆகியோரே கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் நான்கு சிப்பாய்கள் படுகாயமடைந்த நிலையில் தப்பியோடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.(எ-க-13)

## கடற்படையின் டோறா மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலை நடத்தினர் எனத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, கடற்படையினர் திருப்பித் தாக்கியதில் புலிகளின் படகொன்று நிர்மூலமாக்கப்பட்டதாகவும் கூறினார்.

திருகோணமலைக்கும் முல்லைத்தீவுக்கும் இடையே விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் திடீரென நடத்திய படகுப் பயணத்தின் பின்னர் ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீதே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்த கடற்படைச் சிப்பாய்கள் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடற்படையினர் நடத்திய பதில் தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகள் படகுகளில் தப்பியோடிவிட்டனர் என்று இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார்.

ஆனால், திருகோணமலை எலக்கந்த துறையில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடற்புலிகளின் படகுகள் மீதே கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

இத் தாக்குதலில் தங்களின் பல படகுகள் சேதமடைந்தன என்றும்,

தற்பாதுகாப்புக்காக கடற்படையினர் மீது பதில் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து புலிகளால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு சொல்லப்பட்டது என்றும், அதன் பின் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் சம்பவ இடத்தைப்பார்வையிட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-க)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படைச் சிப்பாய்களை இலக்கு வைத்து, சைக்கிளொன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோரே வெடித்தது. கடற்படைச் சிப்பாய்கள் சென்று கொண்டிருந்த ஜீப்க்கு அருகாமையில் சென்ற ஓட்டோவும் கிளைமோரில் சிக்கியதில் மேற்படி நான்கு தமிழர்களும் உயிரிழந்தனர். ஓட்டோச் சாரதியான பிரபா, சித்திரா துரைநாயகம், அவரது பிள்ளைகளான வனிதா மற்றும் துளசிநாதன் ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

சம்பவத்தையடுத்து இந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. திருகோணமலை பொலீஸார் இது குறித்தான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-க-13)

## கடல் விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுமா என்று கேட்டபோது பதிலளித்த கலாநிதி பாலித கோஹென்ன "அதனைப் புலிகளும் ஏற்றுக்கொள்வார்களென்று அரசு முழுமையாக நம்புகிறது" - எனத் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அரச துருப்புக்களைச்சாடி கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை குறித்து நேற்றைய சந்திப்பின்போது தங்களது அதிருப்தியைத் தாங்கள் வெளியிட்டனரென்று குறிப்பிட்ட கலாநிதி கோஹென்ன இந்தத் தவறுகளைச் சீர்செய்து சரியான விதந்துரைகளுடன் மற்றுமொரு அறிக்கையை வெளியிட கண்காணிப்புக்குழுவின் தலைமை உடன்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றைய இந்த பேச்சுக் குறித்து அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் நேற்றிரவு ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கமளிக்க ஏற்பாடாகியிருந்தது. (உ)

## ஈழ அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து படகுகள் மூலம் தமிழகம் நோக்கி வந்தனர். ஆனால், படகைச் செலுத்திய நபர்கள் இவர்களை இடைநடுவில் எட்டாம் திட்டு என்ற மணல் திடலில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

தமிழக மீனவர்கள் இது குறித்து மண்டபத்திலுள்ள இந்தியக் கரையோரக் காவல் படையினருக்கு அறிவித்தனர். இதனையடுத்து ரோந்துப் பணி மேற்கொண்டு தேடுதல் நடத்திய கடலோரக் காவல்படையினர் பல இடங்களில் தேடியும் அகதிகளைக் கண்டு பிடிக்க முடியாமல் திணறிவருகின்றனர்.

இந்திய - இலங்கை கடல் எல்லைப் பகுதியில் பலத்த காற்று, கடல் கொந்தளிப்பு உள்ளதால் அகதிகளைத் தொடர்ந்து தேடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, இடைநடுவில் கைவிடப்பட்ட எட்டு அகதிகளும் காப்பாற்றுவோர் யாருமின்றியும், அன்ன ஆகாரமின்றியும் நடுக்கடல் திட்டில் தவித்துக்கொண்டிருக்கக் கூடுமென்று அஞ்சப் படுகிறது. (எ-க)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக் கூட்டங்களில் உரையாற்றுவதற்கும், ஊடகங்களில் நேர்காணல் அளிப்பதற்கும் இந்திய, தமிழக அரசுகள் தடைவிதித்திருந்தன. ஆனாலும், குறிப்பிட்ட காலத்திற்கு பொதுக் கூட்டங்களில் உரையாற்றுவதற்கு அண்மையில் நெடுமாறனுக்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது.

நீதிமன்ற அனுமதிக்குப் பின்னர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேச வேண்டும் என்ற கோரிக்கையை நெடுமாறன் பகிரங்கமாக முன்வைத்தார்.

இலங்கை அரசு உலக நாடுகளை ஒருபுறம் ஏமாற்றிக் கொண்டு மறுபுறம் இனவெறிப் படுகொலைகளை நடத்திக் கொண்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டிய பழ. நெடுமாறன், இதனை இந்திய அரசு தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறினார். அவர் ஆற்றிய உரையின் சாராம்சம் வருமாறு:-

''ஜெனீவா பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாக இருந்த நிலையில் சிங்களவர்கள் திருகோணமலையில் இனக்கலவரம் ஒன்றை அரங்கேற்றினார்கள். அவர்களுக்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை என்பது இதன் மூலம் தெளிகின்றது.

திருகோணமலையில் இருக்கும் கடற் படைத் தளத்தை அமெரிக்காவிற்கு தாரை வார்த்து விட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தமிழீழத் தலைநகரில் நிலைநிறுத்த சிங்கள அரசு முயல்கிறது. அமைதிப் பேச்சுகளுக்கு முன்னர் தமிழர்களுக்கு எதிரான வன்முறை கிளர்ந்தால் அமைதிப் பேச்சுகளை எப்படி நடத்த முடியும்?

இலங்கைப் பிரச்சினையிலே இந்திய அரசு இரண்டும் கெட்டான் நிலையிலேயே இருக்கிறது. அது ஈழத் தமிழர்களுக்கும் உதவாது. இந்தியாவிற்கும் உதவாது. எனவே, இலங்கைப் பிரச்சினை, அங்குள்ள நிலைமை குறித்து எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்துப் பேச வேண்டும். - இப்படிக் கூறினார் பழ. நெடுமாறன். (எ-க)


16 வருட கல்விச் சேவையில் .....
O/L DAY CLASS
பிரிவு 1 ஆரம்பம்: 03.05.2006 புதன் காலை 8.00 - 2.00

| | |
|---|---|
| கணிதம்-K.P.S.விஜயன் சசிகாந் | விஞ்ஞானம்: சங்கர்வாமன் |
| சமூகக்கல்வி-E.A.ஜெயன் | தமிழ்: S.வைகுந்தநாதன் |
| ஆங்கிலம்-Y.ஜெயந்தன் | சமயம்-B.மயூதரன் |
| வர்த்தகம்- L.மயூரன் | விவசாயம்- S.ரமேஷ் |

- யாழ். மாவட்டத்திலே O/L வகுப்புகளுக்கு தன்னிகரில்லாத ஒரே நிறுவனம்.
- கடந்த வருடத்தில் அதிக மாணவர்களை சித்தியடைய வைத்த ஒரே நிறுவனம்.
- அனுமதிகள் மே 31 வரை வழங்கப்படும்.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

O/L DAY CLASS
ஆரம்பம்: 05.05.2006 வெள்ளி காலை
யாழ்.நகரின் அதிமுன்னணி ஆசிரியர் சேவை
விபரங்கள் அலுவலகத்தில்
யூனிவேசல் (யா/ இந்துமகளிர் கல்லூரி அருகில்)
A/L 2008
ஆரம்பம்: 06.05.2006 சனி காலை
சாது முன்னணி ஆசிரியர் சேவை.

பொதுச் சாதாரண பரீட்சை
(C.G.T.)
விசேட கருத்தரங்கு
காலம்: 06.05.2006 சனி 2 p.m
BY:P.சுபாஸ்கர், P.காந்தரூபன்
A/L2006 அனைத்து மாணவரும் பயன்பெறலாம்.
நூல்கள், கையேடுகள் இலவசம்
யூனிவேசல் (யா/ இந்துமகளிர் கல்லூரி அருகில்).

LOGIC
2008 A/L
புதன் 4 p.m
03/05/06
சனி
ஞாயிறு
UNIVERSAL
(அரசடி வீதி).

D.C.M பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
A/L 2008
பிரிவு 2
கலை,வர்த்தகம்
ஆரம்பம்
மே 06 சனி 8.00 மணி

FINAL SEMINAR
CHEMISTRY
- Basic முதல் கைத்தொழில் இரசாயனம் வரை முக்கிய பகுதிகளின் மீட்டல்.
- எதிர்பார்ப்பு வினாக்கள்.
- பாடக்குறிப்புகள்.
- MODEL Paper கலந்துரையாடல்.
- குறைந்தது 7 நாள்கள் நடைபெறும்.

இடம்:
NEW SCIENCE CENTRE
ஆரம்பம்: 04.05.06 வியாழன் 9-2
கட்டணம்: 400/=
By: அன்பரசன் B.Sc.

BEACON - யாழ்.நகர்
A/L 2008 புதிய பிரிவு
கலைப் பிரிவு

| | |
|---|---|
| Log. - S.S.மனோகரன் | Tam. - நாக.தமிழிந்திரன் |
| H.C. - ஜெயக்குமார் | Geo. - T.கிரிதரன் |
| DRA- T.J.சுதன் | Cri. - டானியல் (BRO) |
| Pol.Sc.- பொன்.சந்துரு, N.றஜிதா | Eco. - M. விக்கி |

ஆரம்பம்: 06.05.2006
Sat. - 8.00 a.m.
(49956) (25-34-12)

கணக்கீடு
திரு.பாலவாசன்
A/L 2007
ஒற்றைப்பதிவு
Tue., Thu. 4 - 5
ஆரம்பம்:
02.05.2006 Tue. 4 p.m
நிரு

நிரு
ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
O/L DAY CLASS
ஆரம்பம்: 03.05.2006
புதன் 7.30 a.m.

பிரத்தியேக வகுப்பு
A/L 2008
பொருளியல்
S.வரதராஜன்
ஆரம்பம்
04 - 05 - 06
வியாழன், மாலை 4.00 மணி
D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

A/L 2008 புதிய பிரிவு
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு :- K.B.கஜன்
பொருளியல் :- M.விக்கி
வர்த்தகம் :- S.யசோ
ஆரம்பம்: 06.05.2006 Sat. 12.00 p.m.
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
BEACON - யாழ் வெலிங்டன் சந்திஅருகில்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.05.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 மே

வெளியீடு 01

# மாதிரி வினாப்பத்திரம்

## அளவையியலும் விஞ்ஞானமுறையும் - I

3 மணித்தியாலம்

திரு. S.S.மனோகரன், திரு. R.S.சந்திரன்.

(அளவையியலும் விஞ்ஞான முறையும்- I, பகுதி - II இன் வினாக்களின் தொடர்ச்சியும் பகுதி - III வினாக்களும் இங்கு பிரசுரமாகின்றன.)

8. கீழ்வரும் வாதங்களைக் குறியீட்டில் அமைத்து, எடுகூற்றுக்களிலிருந்து முடிவைப் பெறுவதன் மூலம் அவை வலிதானவை எனக் காட்டுக.
   அ) யுத்த நிறுத்தம் ஏற்பட்டால் வன்செயல்கள் ஏற்படாது என்பதுடன் வன்செயல்கள் ஏற்பட்டால் யுத்தநிறுத்தம் ஏற்படாது. யுத்தநிறுத்தம், வன்செயல்கள் ஆகிய இரண்டுமே ஏற்படவில்லை என்பதையே இது புலப்படுத்துகின்றது.
   ஆ) அவள் அழகானவளாகவும், பண்புள்ளவளாகவும் இருந்தால் அவளுக்கு இலகுவாகத் திருமணம் நடக்கும். ஆகவே அவளுக்கு இலகுவாகத் திருமணம் நடக்கவில்லையாயின் ஒன்றில் அவள் அழகானவள் அல்ல, அல்லது பண்புள்ளவள் அல்ல.
   இ) அளவையியல் அல்லது கணிதம் இலகுவானதாக இருக்குமாயின், அளவையியலில் அல்லது கணிதத்தில் இலகுவாகச் சித்திபெற முடியும். ஆனால், அளவையியலில் அல்லது கணிதத்தில் இலகுவாகச் சித்திபெற முடியாது. ஆகவே அளவையியலோ அல்லது கணிதமோ இலகுவானதல்ல.
   ஈ) விலை குறையக் கேள்வி கூடுமாயின், உற்பத்தி அதிகரிக்கும். ஆகவே உற்பத்தி அதிகரிக்கவில்லையெனில் கேள்வி கூடவில்லை.

(ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்)

### பகுதி III

9. அ) கீழே தரப்படுபவை சரியானவையா? பிழையானவையா? உமது விடையில் சரி அல்லது பிழை என்ற பதங்களை மட்டும் பயன்படுத்துக.
   1. மின்னல் ஏற்படும் ஆயினே முழக்கம் ஏற்படும் என்பதை முழக்கம் ஏற்படுமாயின் மின்னல் ஏற்படும் எனக் கூறலாம்.
   2. அவன் விமானியோ அல்லது விஞ்ஞானியோ அல்லன் என்பதை அவன் விமானியுமல்லன், விஞ்ஞானியுமல்லன் எனக் கூறலாம்.
   3. அளவையியல் வாதங்கள் எப்போதும் மூன்று கூற்றுக்களை மாத்திரமே கொண்டிருக்கும்.
   4. ஒரு நியாயத்தொடையின் எடுகூற்றுக்கள் இரண்டும் I எடுப்புக்களாக இருக்கும்போது நடுப்பதம் வியாத்தியில்லாப் போலி ஏற்படாது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள்)

   ஆ) கீழ்வரும் நிபந்தனை வாக்கியங்களை அவற்றின் பொருளை மாற்றாது உறழ்வு வாக்கியங்களாகத் தருக.
   1. அவன் நடிகனாக இல்லையாயின், அவன் பாடகர் ஆவான.
   2. போர்நிறுத்தம் ஏற்படாவிடில் சமாதானம் ஏற்படாது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள்)

   இ) குறிப்புரை தருக.
   1. வல்லுறழ்வும், மெல்லுறழ்வும்.
   2. குறைப்பதம். (ஒவ்வொன்றுக்கும் 04 புள்ளிகள்)

10. அ) நியமப் போலிகளையும், நியமமில் போலிகளையும் வேறுபடுத்திக் காட்டுக. (05 புள்ளிகள்)
   ஆ) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளில் காணப்படும் போலிகளை எவை என எடுத்துக்காட்டி ஒவ்வொரு போலியும் நிகழ்ந்துள்ள விதத்தைச் சுருக்கமாக விளக்குக.
   1. இலங்கையில் வேறெந்த மாகாணத்தையும் விட யாழ்ப்பாணத்தில்தான் அதிகளவான கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன. அதிகளவிலான மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைவதும் யாழ்ப்பாணத்தில்தான். ஆகவே மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைவதைத் தவிர்க்கவேண்டுமாயின் தனியார் கல்வி நிறுவனங்களை நாம் உடனடியாக மூடிவிட வேண்டியதுதான்.
   2. வேகமாக ஓடும் எதற்கும் வேகமாகச் சுற்றும் சில்லுகள் உண்டு. இவன் வேகமாக ஓடுகிறான். ஆகவே இவனுக்கு வேகமாகச் சுற்றும் சில்லுகள் உள்ளன.
   3. நான் அவனுடன் பழகிய எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் மது அருந்தியதைக் கண்டதில்லை. எனவே அவன் ஒருபோதும் மது அருந்தியதில்லை என முடிவு செய்கின்றேன்.
   4. இலங்கையிலுள்ள பெரும்பாலான வீடுகளில் சொனி (Sony) தொலைக்காட்சிப் பெட்டிகளே அதிகமாகக் காணப்படுகின்றன. உனது தெரிவும் சொனி தொலைக் காட்சிப் பெட்டியே என்பதில் எனக்கென்ன சந்தேகம்?
   5. சுற்றுலாவுக்கு வருவதாக நீ ஏற்கனவே என்னிடம் உறுதியாகக் கூறியிருந்தாய். இப்போதோ சுற்றுலாவுக்கு வர மறுக்கின்றாய். இதன் மூலம் நீ மிகப்பெரிய தவறிழைத்துள்ளாய். இப்போது நீ உனது தாயாருக்குக் கடும் சுகவீனம் எனக் கூறி சுற்றுலாவுக்கு வரமறுப்பது பொருத்தமற்றது.

(ஒவ்வொன்றுக்கும் 03 புள்ளிகள்)

11. கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.
   1. கலப்பு நிபந்தனை நியாயத்தொடை.
   2. நியாயமாலை.
   3. போதிய நியாய விதி.
   4. உரையாடல் உலகு.
   5. பாரம்பரிய அளவையியலின் குறைபாடு.

12. அ) நீதிமன்றில் முன்வைக்கப்படும் பின்வரும் சாட்சிய வகைகளுக்கு குறிப்புகள் தருக?
   1. சந்தர்ப்ப சாட்சியம்.
   2. குற்றம் சாட்டப்பட்டவரின் குற்ற ஒப்புதல்.

(ஒவ்வொன்றுக்கும் 04 புள்ளிகள்)

   ஆ) பெறுமானக்கூற்றையும், நோர்வுக் கூற்றையும் வேறுபடுத்திக் காட்டுக? (08 புள்ளிகள்)
   இ) "பழிக்குப் பழிவாங்கும் தண்டனை" பற்றிக் குறிப்புரை தருக? (04 புள்ளிகள்)

## அளவையியலும் விஞ்ஞானமுறையும் - II

குறிப்பு :- I,II,II ஆகியவை ஒவ்வொன்றிலுமிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிந்தெடுத்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### பகுதி I

1. (அ) பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம, பிரயோக விஞ்ஞானம், விஞ்ஞானமல்லாதவை என்பவற்றுள் எதில் பின்வருவன அடங்கும்.

(1) பேய்களின் நடமாட்டம். (2) கோள்களின் நீள்வளைய விதி.
(3) அழகியல். (4) வானிலை.
(5) குடிப்பரம்பலியல். (6) பயிர் விஞ்ஞானம்.
(7) மரபணுவியல். (8) சுற்றாடல் விஞ்ஞானம்.

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி)

(ஆ) விஞ்ஞான முறை என்பதன் மூலம் நீர் புரிந்து கொள்வதென்ன? (02 புள்ளிகள்)

(இ) விஞ்ஞானத்தையும், விஞ்ஞானமல்லாதவற்றையும் அறிந்து கொள்வதற்காக காள் பொப்பர் முன்வைத்துள்ள பிரித்தறியும் எல்லை வரையறை விதியைக் கூறுக? (02 புள்ளிகள்)

(ஈ) எவ்வகை விஞ்ஞானங்களுக்கு பொப்பரின் அளவை விதி பொருந்தாது? (01 புள்ளி)

(உ) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் பொப்பரின் அளவை விதிக்குரிய அர்த்தத்தில் விஞ்ஞான ரீதியானவையா? அவ்வாறல்லாதவையா? எனக் கூறுக.
(1) ஒன்றில் அவன் சித்தி பெறுவான் அல்லது சித்தி பெறான்.
(2) சமபக்க முக்கோணி சமமான மூன்று கோணங்களைக் கொண்டிருக்கும்.
(3) கல்வி அழகே அழகு.
(4) நீ மரவள்ளி சாப்பிட்டால் உனக்கு வயிற்றுவலி ஏற்படும்.
(5) கொலைக்குற்றத்திற்கு மரணதண்டனையே தீர்ப்பாகும்.

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி)

(ஊ) "எல்லாக் காகங்களும் கறுப்பு" எனும் கூற்று நிச்சயத்தன்மை வாய்ந்ததா? உமது விடைக்கு நியாயமும் தருக. (02 புள்ளிகள்)

2. (அ) நோக்கலுக்குரிய நிபந்தனைகளையும், போலிகளையும் விளக்குக. (6 புள்ளிகள்)
   (ஆ) 'அவதானங்கள் மூலமாகவும் பரிசோதனைகள் மூலமாகவும் பெறப்படும் தரவுகள் 100% சரி நுட்பமானவை அல்ல' தெளிவுபடுத்துக. (4 புள்ளிகள்)
   (இ) இயற்கை அவதானத்தில் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றதா? (5 புள்ளிகள்)
   (ஈ) கீழ்வருவன சரியா? பிழையா? என எழுதுக.
   (1) புவியீர்ப்புக் கோட்பாடு நேரல் சோதனையை அடிப்படையாகக் கொண்டது.
   (2) லூயிபாஸ்ரர் நீர்ப்பய நோய்க்கான தடுப்பு ஊசி மருந்தைக் கண்டு பிடிப்பதற்குத் தீர்ப்புப் பரிசோதனையைப் பயன்படுத்தினார்.
   (3) கலிலியோ புலமைவாத மரபையும் கைவினை மரபையும், ஒன்றினைப்பதில் வெற்றி கண்டார்.
   (4) கலிலியோ சந்திரனில் உள்ள குழிகளையும், மலைகளையும் கண்டு கொள்வதற்குப் பயன்படுத்திய முறை பரிசோதனை முறையாகும்.
   (5) நியூட்டன் புவியீர்ப்பு விதி உருவாக்கத்தில் சிந்தனைப் பரிசோதனையை மேற்கொண்டார். (ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளிகள்)

3. (அ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக?
   i. ஒப்புமை அனுமானம்.
   ii. வரைவிலக்கணமும் விஞ்ஞானமும்.
   iii. இயற்கை ஒரு சீர்மை விதி.
   iv. வகையீடும் விஞ்ஞானமும். (ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்)
   (ஆ) (i) 'அளவறிதலே விஞ்ஞானத்தின் பண்பாகும்' விளக்குக.
   (ii) விகிதாசார அளவுத்திட்டத்தையும், இடையிட்ட அளவுத்திட்டத்தையும் வேறுபடுத்திக் காட்டுக. (ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்)

4. (அ) 'ஒரு கோட்பாடு விதிகளை விளக்குகின்றது' விஞ்ஞான வரலாற்றில் இருந்து ஓர் உதாரணம் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)
   (ஆ) 'விளக்கத்தின் பாதுகாப்பு விதிக் காட்டுரு' என்றால் என்ன என்பதை ஓர் உதாரணம் தந்து விளக்குக. (10புள்ளிகள்)

### பகுதி II

5. அ. நிகழ்தகவு பற்றிய பாரம்பரிய விளக்கத்தையும், மீடிறன் விளக்கத்தையும் உதாரணம் தந்து வேறுபடுத்திக் காட்டுக. (4 புள்ளிகள்)
   ஆ. 1. ஒரு தாயக்கட்டை இரண்டு தடவைகள் வீசப்படுகின்றது. வீசப்பட்டதன் முடிவுகள் ஒன்றோடொன்று சாராமையானதா? ஏன்?
   2. சமஅளவான பந்துகளைக் கொண்டதொரு பெட்டியில் இருந்து பிரதி வைப்பின்றி இரு பந்துகள் எடுக்கப்பட்ட நிகழ்வுகள் சாராமையானதா? ஏன்? (ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்)
   இ. இரு தாயக்கட்டைகள் ஒரே நேரத்தில் வீசப்பட்டன?
   (a) தொடர்புள்ள மாதிரி வெளியில் புள்ளிகளின் எண்ணிக்கை என்ன? (2 புள்ளிகள்)
   (b) மேலே வீசப்பட்ட (இரு தாயக்கட்டைகளின் ) தொகை பின்வருவனவாக இருப்பதற்குரிய நிகழ்தகவு என்ன?
   1.1.
   ii. 6
   iii.12.
   iv. 13. (ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்)
   (c) வீசப்பட்ட மொத்தம் 12 ஆக இருப்பதற்கான நிகழ்தகவை விட 11 ஆக இருப்பதற்கான நிகழ்தகவு அதிகமானதாக இருக்கும் என்பது சரியானதா? உமது விடைக்கு நியாயங்கள் தருக. (02 புள்ளிகள்)

6. (அ) பின்வரும் புள்ளி விவரவியல் எண்ணக்கருக்களை உதாரணங்கள் தந்து விளக்குக.
   (1) நியம விலகல்.
   (2) நிறையளிக்கப்பட்ட இடை.

(ஒவ்வொன்றுக்கும் 3 புள்ளிகள்)

   (ஆ) நேர்மையான மாதிரியின் பண்புகள் எவை? (4 புள்ளிகள்)
   (இ) சோதனை ஒன்றுக்குத் தெரிவுசெய்யப்படும்-மாதிரியொன்று சம நிகழ்தகவாக இருக்கவேண்டும் என்று கூறப்படுவதன் பொருள் என்ன?
   சோதனைக்காக தெரிவுசெய்யப்பட்ட உமது பாடசாலையில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என வேறுபட்ட மதப்பிரிவினர் உளர். இவ்வேறுபாடுகள் சோதனையின் முடிவுகளில் தாக்கங்களை ஏற்படுத்தும் எனக் கருதுக. இந்நிலைமையில் இக்குடியிருப்பில் இருந்து மாதிரிகளைத் தெரிவுசெய்வதற்கு நீர் எவ்வாறு செயற்படுவீர் என்பதையும் சம நிகழ்தகவை அங்கு எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதையும் விவரிக்குக. (6 புள்ளிகள்)
   (ஈ) மொழியாற்றலை அறிந்து கொள்வதற்காக வழங்கப்பட்ட சோதனை ஒன்றில் A, B, C ஆகிய மாணவர்கள் பெற்ற புள்ளிகள் முறையே 0,35,70 ஆகும். இப் புள்ளிகளின் அடிப்படையில் பின்வரும் முடிவுகளுக்கு வருவது நியாயமானதெனக் கருதுகின்றீரா?
   உமது விடைக்கு நியாயங்கள் தருக.
   1. A என்ற மாணவனுக்கு எந்த விதமான மொழியாற்றலும் இல்லை.
   2. C இன் மொழியாற்றல் B இன் இருமடங்காகும். (2 புள்ளிகள்)
   உ) கீழே தரப்பட்ட அட்டவணையில் A, B ஆகிய இருமாறிகள் ஏதோ ஒருவகையில் தொடர்புபட்டுள்ளன. தொடர்பாக்கல், (ஒப்புமை தொடர்பு), பற்றிய உமது அறிவைப் பயன்படுத்தி அது எவ்வகைத் தொடர்பு எனக்கூறி விளக்குக.

| A | B |
|---|---|
| 10 | 100 |
| 20 | 80 |
| 30 | 60 |
| 40 | 40 |
| 50 | 20 |
| | |

(2 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. (அ) "மானிடவியலாளர்கள், வேடுவர் போன்ற பழங்குடி மக்களை ஆராய்வதற்கு அவர்களின் மத்தியில் பல வருடங்களைச் செலவிடுகின்றனர்" இது ஏன் அவசியம் என்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)
(ஆ) வினாக்கொத்து முறையைக் காட்டிலும் போட்டி முறையில் காணப்படும் சிறப்பம்சங்கள் யாவை?
(5 புள்ளிகள்)
(இ) தனி நிகழ்வு ஆய்வை விளக்கி சமூக விஞ்ஞானத்தில் அதன் பயன்பாடுகளைக் கூறுக.
(5 புள்ளிகள்)
8. (அ) "சமூக விஞ்ஞானத்தில் சரியான எதிர்வு கூறல்களைப் பெறுவதற்கான சாத்தியங்களை" ஆராய்க?
(10 புள்ளிகள்)
(ஆ) கீழ் வருவனவற்றுள் ஏதேனும் இரண்டினது விஞ்ஞான அம்சங்களை எடுத்துக் காட்டுக.
1. பொருளியல்
2. உளவியல்
3. தொல்பொருளியல் (ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்)

## பகுதி III

9. 1. மருத்துவத்துறைக்கு கிபேர்க்கிரட்டிஸ் ஆற்றிய பங்களிப்பை விளக்குக.
(4 புள்ளிகள்)
11. கோள்களின் இயக்கம் பற்றிய கெப்ளரின் விதிகளைக் கூறுக.
(04 புள்ளிகள்)
111. மருத்துவத்துறைக்கு லூயிபாஸ்ரரின் பங்களிப்புகள் யாவை?
(04 புள்ளிகள்)
(ஆ) ஹொப்ஸ், லொக், ரூசோ ஆகிய சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்ட "சமூக ஒப்பந்தக் கொள்கை" ஒரே மாதிரியானவை அல்ல விளக்குக.
(8 புள்ளிகள்)
10. அ. உலகின் தோற்றம் பற்றிய ஏதேனும் இரு கோட்பாடுகளை விளக்குக.
(05 புள்ளிகள்)
(ஆ) விஞ்ஞானத்திற்கு என்டனி லிவான்ஹோவின் பங்களிப்பு யாதெனக் கூறுக.
(05 புள்ளிகள்)
(இ) நடத்தைவாத உளவியலும் ஜே.பி.வாற்சனும்.
(05 புள்ளிகள்)
(ஈ) விஞ்ஞான உலகிற்கு ஜன்ஸ்ரைனின் பங்களிப்பு.
(05 புள்ளிகள்)

11.(அ) பொய்ப்பித்தல் கோட்பாட்டில் காணப்படும் தொகுத்தறி பண்புகள் யாவை?
(8 புள்ளிகள்)
(ஆ) பின்வருவனவற்றுக்கு குறிப்புரைகள் வரைக.
1. விஞ்ஞான புரட்சியின் இயல்பு பற்றிய கூனின் கருத்து.
2. விஞ்ஞான முறையியல் பற்றிய, பெயராபெண்டின் கருத்து.
3. முறையியல் பற்றிய லக்காதொஸின் கருத்து.
(ஒவ்வொன்றுக்கும் 04 புள்ளிகள்)

12.(அ) துரித தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்டு வரும் அனுகூலங்களையும், பிரதி கூலங்களையும் ஆராய்க.
(10 புள்ளிகள்)
(ஆ) பின்வருவனவற்றுள் இரண்டைப்பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
(I) பரிசோதனைக் குழாய் குழந்தை.
(II) இன்றைய விஞ்ஞான யுகத்தில் சமயம்.
(III) செயற்கை நுண்ணறிவு.
(IV) கருணைக்கொலை (சுகமரணம்).
(ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்)

## விடைக் குறிப்புகள்

## தமிழ் - II

வெளியீடு 02

திரு. K.ஈஸ்வரன் B.A. Hons, Dip. in Edu. - கொழும்பு

(தமிழ் - II, பகுதி II இன் விடைக்குறிப்புகள் இங்கு பிரசுரமாகின்றன.)

### பகுதி II

4) அ) இந்த பதினொரு நூல்களும் அறம்கூறும் நூல்கள் - (நாலடியார், நான்மக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், திருக்குறள் - அறம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, சிறு பஞ்ச மூலம்)
இது புறம்கூறும் நூல் - களவளி நாற்பது
இந்த ஆறு நூல்களும் அகம்கூறும் நூல்கள் - (ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது)
இந்த இரண்டு நூல்களும் இரட்டைக் காப்பியங்கள் - (சிலப்பதிகாரம், மணிமேகலை)
இந்த நான்கு நூல்களும் பக்தி பற்றிக் கூறுபவை - (முதலாழ்வார் பாடல்கள், அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை)
(6 புள்ளிகள்)
ஆ) (1) அறம் கூறுவதை பெருவாரியான பொருளாகக் கொண்டது அறநெறிக்காலம் (1) அறநூல்கள் - 11நூல்கள் 2) அகம் கூறும் நூல்கள் - 06 (3) புறம் கூறுவது – 01 (4) சமயப் பிரசார நூல்களின் தோற்றம் (5) இரட்டைக் காப்பியங்கள் (6) ஒரு பொருள் பல தொடர்களில் வருவது (7) வெண்பா பெரு வழக்கு ஏனைய பாக்களுமுண்டு (8) அணிப் பயன்பாடு (9) பக்திப் பாடல்களின் ஆரம்பம் என்பவை தொகுத்து எழுதப்படவேண்டும்.
(9புள்ளிகள்)

5)
அ)சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி - பெருங்காப்பியம்
சூளாமணி, யசோதரகாவியம், உதயண குமாரகாவியம், நாககுமார காவியம், நீலகேசி - சிறு காப்பியங்கள்
வீரசோழியம், நன்னூல் - இலக்கணநூல்கள்
பெரியபுராணம், கந்தபுராணம் - பக்தியிலக்கியம்
கம்பராமாயணம், நளவெண்பா - இதிகாசம்
குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், கலிங்கத்துப் பரணி - சிற்றிலக்கியம்
திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம் சிவஞானசித்தியார், இருபாஇருப..து, உண்மை விளக்கம் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ப..றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம் சங்கற்பநிராகரணம் - சைவசித்தாந்த சாஸ்திர நூல்கள் என்றவாறு பட்டியலிட்டுக்காட்ட வேண்டும்.
(9புள்ளிகள்)
ஆ)
1) தனது காவியத்தில் தமிழ்ப்பண்பாட்டையும் அனைத்திந்தியப் பண்பாட்டையும் இணைக்கும் முயற்சி
2) இராமாயணம் சொல்வளம், ஓசைவளம், கற்பனைவளம் சிறந்து விளங்கியமை
3) 96 வகைப் பிரபந்தங்களையும் பயன்படுத்தியுள்ளார்.
4) தான் கருதிய கருத்தை தெளிவாய்ப் புலப்படுத்தக் கூடிய திறமை கைவரப்பெற்றவர்
5) கம்பராமாயணம் 'கம்பநாடகம்' எனப்போற்றப்படுதல்.
6) இராமாயணம் தமிழின் சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகின்றது.
என்ற கருத்துகள் தொகுத்து எழுதப்படவேண்டும்.
(6புள்ளிகள்)
6) அ)
1 -எழுந்தமை, 2- பழைமை போற்றும் பண்பு.
3 -வித்துவத்திறமை வெளிப்படுத்தும் பண்பு. (யமகம், திரிபு)
4 -தனிப்பாடல்கள் தோன்றியமை, 5 - வசைக்கவிகள் பாடப்பட்டமை.
6 -வடநூற்கருத்துகள், சொற்றொடர்களைப் பயன்படுத்தியமை.
7 -உரைநடை நூல்கள் - தத்துவபோதக சுவாமிகள்.
என்பன போன்ற பண்புகளை விவரித்து எழுதவேண்டும்.
(9புள்ளிகள்)
ஆ)
1) உழவர்கள், குறவர்கள் முதலியோர் பாட்டுடைத் தலைவரானமை. (முக்கூடற்பள்ளு, திருக்குற்றாலக்குறவஞ்சி)
2) பொதுமக்கள் பயன்படுத்தும் மொழி, இசை, நடனம், நாடகம் முதலியவை இலக்கியத்தில் இடம்பெற்றமை என்பன போன்ற கருத்துகளை உள்ளிட்டு விடையை அமைக்கவும்.
(6புள்ளிகள்)

### பகுதி III

7) அ) சரசோதிமாலை, செகராசசேகரமாலை, செகராசசேகரம், பரராசசேகரம் தட்சிணகைலாசபுராணம், கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை சிலம்பு கூறல், ரகுவம்சம், வையாபாடல், கோணேசர் கல்வெட்டு கைலாய மாலை, திருக்கரசைப்புராணம், கதிரைமலைப்பள்ளு போன்ற இலக்கியங்கள் தொகுத்து எழுதப்படவேண்டும்.
(7புள்ளிகள்)
ஆ) வைத்தியநூல் - பரராசசேகரம், சோதிடம் - செகராசசேகரம்
சமயச்சார்பு - தட்சிணகைலாய புராணம், வரலாறு - வையாபாடல்
காவியப்பண்பு - ரகுவம்சம் என்பவை விளக்கப்படல் வேணடும்.
(8புள்ளிகள்)
8) அ) 1942- நவீன தமிழ்க்கவிதை - மறுமலர்ச்சி 50, 60, 70களில் மறுமலர்ச்சிக் கவிஞர்களாகக் குறிப்பிடப்படுபவர்கள் - நாவற்குழியூர் நடராசன், அ.ந.கந்தசாமி போன்றோர். 60, 70களில் எம்.ஏ.நு..மான், சண்முகம் சிவலிங்கம் வசனகவிதை வரதர்- 70 இற்குப்பின் புதுக்கவிதை என்பவை தொகுத்து எழுதப்படவேண்டும்.
ஆ) ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் பாவலர் துரையப்பாப்பிள்ளை அவர்கள் காத்திரமான ஓர் இடத்தை வகிக்கின்றார். அவரால் ஈழத்துக் கவிதைப் பெற்ற சிறப்பு களைத் தொகுத்து எழுதுதல் வேண்டும்.
(6புள்ளிகள்)
9) அ) கனக செந்திநாதன்
இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதியவர். இவரின் தமிழ் உரை நடை வரலாறு தமிழுலகிற்கு வரப்பிரசாதம், நவீன இலக்கியத் துறையின் முன்னோடி, இலக்கியத் திறனாய்வில் மேனாட்டார் அணுகுமுறைமை பின்பற்றினார். நலனாய்வு பற்றிப் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். விபுலானந்தரின் மாணவன், மரபு வழிக் கல்வியையும் கல்வியாளரையும் போற்றினார். இலக்கண நுட்பங்கள் தெரிந்தவர்.
(71/2புள்ளிகள்)
ஆ) கே.டானியல்
1 ஈழத்து தமிழ்ப் புனைகதை எழுத்தாளர் வரிசையில் சிறப்பிடம் பெறுபவர்.
2 யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பை நன்கு விளங்கிக் கொண்டு தன் புனை கதைகளில் புலப்படுத்தியவர்.
3 நாவல்கள் - பஞ்சமர், கோவிந்தன், தண்ணீர், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள், போராளிகள் காத்திருக்கின்றனர் முதலியன.
4 குறுநாவல்கள் - முருங்கையிலைக் கஞ்சி, பூமரங்கள் முதலியன.
5 சிறு கதைகள் - உலகங்கள் வெல்லப்படுகின்றன.
(71/2புள்ளி)
இ)நீலவாணன்
1. கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
2. "ஓடி வருவதேனோ" என்ற கன்னிக் கவிதை மூலம் அறிமுகமானவர்.
3. 1955-72க்கு இடைப்பட்டகாலத்திலே கவிதையோடு உருவகக் கதை, சிறுகதை, விருத்தாந்த சித்திரம், நாடகம், கட்டுரைகள் முதலிய பல இலக்கிய முயற்சிகளில் கை தேர்ந்தவர்.
4. ஈழத்துக் கவிதையில் புதியபரிணாமத்தைத் தோற்றுவித்தவர்.
5. "உன்னைத் தேடித் தேடி ஆழிக்கரையில் ஒரு பெண் வாடுகிறாள்" பாவம் வாத்தியார்.
6. பலவித யாப்பமைதிகளையும் கையாண்டுள்ளார்.
(71/2புள்ளிகள்)
ஈ) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
(1) சமயச் சார்புடைய பிரபந்தங்களை இயற்றியமை. (2) தேசிய சமூக உணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள் (3) சிறுவர்களுக்கான பாடல்கள் (4) கதைப் பாடல்கள் (5) நாடக இலக்கிய ஆக்கம்.
(71/2புள்ளிகள்)
(முற்றும்)

அன்பு மாணவர்களே!

இலங்கையின் கல்வியில் தலைசிறந்து விளங்கும் மாவட்டங்களின் முன்னணி ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களும், விடைகளும் உங்கள் பரீட்சை நலன்கருதி இங்கு வெளிவருகின்றன. அந்தவகையில் எதிர்வரும் வாரங்களிலும் தலைசிறந்த ஆசிரியர்களின் பரீட்சை எதிர்பார்ப்புடன் கூடிய வினாத்தாள்களும் வெளிவர வுள்ளன. அத்துடன், எமது கல்விச்சுடரினால் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைத் தோற்று வித்துக்கொண்டிருக்கும் பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களும் எதிர்வரும் காலங்களிலும் இப்பகுதியில் பிரசுரிக்கப்பட வுள்ளன. பரீட்சை நடைபெறும் திகதி வரை எம்மால் வெளியிடப்படும் பல வினாத்தாள்களில் பல ஆசிரியர்களின் வேறுபட்ட வினா "வியூகங்கள்" அமைந்திருப்பதால் இப்பகுதியில் வெளிவரும் வினாக்களில் பெரும்பாலானவை இறுதி அரசபரீட்சைகளின் வினாக் களாக வெளிவரும் என்பதில் கல்விச்சுடர் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே மாணவர்களே! உங்கள் சிறந்த பெறுபேறுகளுக்காகக் கல்விச்சுடருடன் இணைந்திருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org